வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை




Email : news@eelanadu.lk மலர் : 04 11.09.2023 திங்கட்கிழமை இதழ் : 275 பக்கங்கள் : 16

# இந்தியா – சீனா முறுகல் அதிகரித்தால் தமிழீழம் அமையும் சாத்தியம் உண்டு!



## சித்தார்த்தன் எம். பி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 11

இந்தியா - சீனா முறுகல் அதிகரிக்குமானால் தனிநாடு (தமிழீழம்) அமைவதற்கான சாத்தியம் உண்டு. இதற்காக நாங்களும் தயாராக இருக்கவேண்டும். தமிழ் மக்கள் பலமான அரசியல் அமைப்புகளை வைத்திருக்க வேண்டும் என்று - கூறியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளி கட்சியான புளொட்டின் தலைவர் த.சித்தார்த்தன் எம்.பி. 11



சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தன் வேல் விமான (தங்கரதம்) உற்சவம் நேற்று மாலை இடம்பெற்றபோது.... (படம் : தர்ஷன்)



## சொகுசு பேருந்துடன் விபத்து கோப்பாயில் ஒருவர் மரணம்!

யாழ்ப்பாணம், செப். 11

அதிசொகுசு பேருந்து - மோட்டார் சைக்கிள் மோதி இடம்பெற்ற விபத்தில் குடும்பத் தலைவர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

நேற்று இரவு 8 மணியளவில் கோப்பாய் - இராச பாதை சந்திக்கு அண்மையாக இந்தச் 11

## ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் ராஜபக்ஷக்களே என்பது அம்பலம்!

### கஜேந்திரகுமார் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, செப். 11

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னணியில் ராஜபக்ஷக்களே உள்ளனர் என்பது தற்போது அம்பலமாகியுள்ளது. உள்ளக விசாரணைகள் மூலம் தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மைகளை வெளிக்கொணர முடியாது. குற்றஞ்சாட்டப்பட்ட ராஜபக்ஷ தரப்பினரே பாராளுமன்றத்தில் தெரிவு குழுவொன்றை அமைத்து விசாரணைகளை மேற்கொள்வது என்பது குற்றவாளி ஒருவர் தனது குற்றத்தை தானே விசாரிப்பது போன்றது என்பதுடன் அதற்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது என தமிழ் 11

## சனல் - 4இன் ஆவணப்படம்:

## விசாரிப்பதற்கு ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையில் குழு

### ஜனாதிபதி ரணில் திட்டம்

கொழும்பு, செப். 11

சனல் - 4 தொலைக்காட்சி அண்மையில் ஒளிபரப்பிய சர்ச்சைக்குரிய ஆவணப்படம் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள், குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குழுவொன்றை நியமிக்கவுள்ளார்.

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் உண்மையை கண்டறியவும் நீதியை நிலைநாட்டவும் சாதகமான நடவடிக்கையாக ஜனாதிபதி இந்தக் குழுவை நியமிக்க உள்ளார்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பின்னணியில் 11

## சிறாரின் போசணை குறைபாட்டால் நாட்டின் எதிர்காலம் பாதிக்கப்படும்!

### ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி எச்சரிக்கை

கொழும்பு, செப். 11

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் இலங்கை எதிர்மறையான திசையில் (பின்னடைவு) பயணிக்கிறது. அண்மைக்காலத்தில் சிறுவர்கள் மத்தி யில் அதிகரித்துவரும் மந்தபோசணை குறைபாடு நாட் டின் எதிர்காலத்தில் பெரும் 11

## துஷ்பிரயோகம் செய்யப்பட்ட 7 வயது சிறுமிக்கு எய்ட்ஸ்!

கொழும்பு, செப். 11

இலங்கையின் தென் பகுதியில் ஆசிரியர் ஒருவரால் 7 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பான தகவல்கள் சுமார் 8 மாதங்களின் பின்னர் வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளது. இந்நிலையில், குறித்த 7 வயது மாணவி எயிட்ஸ் தொற்றுக்கு உள்ளாகி உள்ளமை பரிசோதனை களில் தெரியவந்து பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து கொழும்பு ஊடகம் ஒன்று 11

## கிழக்கு ஆசியாவுக்கான எரிபொருள் விநியோக மையம் இலங்கையில்!

### ஜனாதிபதி பணிமனை தகவல்

கொழும்பு, செப். 11

இலங்கையை கேந்திர மையமாக கொண்டு கிழக்கு ஆசியாவுக்கான எரிபொருள் விநியோக கட்டமைப்பை நிறுவும் தீர்மானத்தை ஐக்கிய அரபு இராச்சியம் அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்கவுக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் அரச உயர் மட்ட அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடல்களின் பின்னரே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு ஆசியாவுக்கான எரிபொருள் விநியோக கட்டமைப்பு திட்டத்தை ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக்கான தூதுவர் காலித் நசீர் ஐஹாமரி, ஜனாதிபதி 11

## மூன்று தனியார் மருத்துவ பல்கலைகளை ஆரம்பிக்க சுகாதார அமைச்சு அனுமதி!

கொழும்பு, செப். 11

மூன்று தனியார் மருத்துவக் பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதற்கு தான் அனுமதி வழங்கியுள்ளார் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நமது பல்கலைக்கழகத்தின் மருத்துவ பட்டமும் உலகளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அந்த அங்கீகாரத்தை மீறாமல், அந்தத் தரத்தில் தனியாரோ, அரசோ, பல்கலைக்கழகமோ உருவாக்கப்பட்டால், அதை உலகுக்குக் கொடுக்க முடிந் தால் அதற்கு இணையாக செல்லக்கூடிய திட்டத்தை உருவாக்க வேண்டும். சுகாதார அமைச்சர் என்ற வகையில் நான் மூன்று தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவ அனுமதி வழங்கியுள்ளேன். தற்போது அவை செயல் படுத்தப் பட்டு வருகின்றன" என்றும் அவர் கூறினார். (ஐ)

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

ஒரு காலத்தில் இந்த ஊர்க் குருவி பல சிறுகதைகளை எழுதியிருக்கின்றது. அப்படி எழுதிய போது எழுதிய சிறுகதைகளில் ஒன்று ஒருவர் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் ஒரு கொலையை செய்து விட்டு நேராக ஒரு கத்தோலிக்க குருவானவரிடம் வந்து பாவ மன்னிப்பு பெற்றுச் செல்வதாகவும் ஆனால், அந்த குரு அவர் செய்த கொலையை பற்றி தெரிந்திருந்தபோதிலும் அதனை கடைசிவரை இரகசியமாக வைத்திருக்கவேண்டியது பற்றியும் எழுதியிருந்தது ஞாபகம்.

இப்போது கர்தினால் மல்கம் ரஞ்சித் விடுத்திருக்கின்ற அழைப்பை படித்தபோது இவர் பாவமன்னிப்பு கொடுக்கப் போகிறாரா என்று கேட்காமல் இருக்கமுடியவில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து சர்வதேச தரத்தில் விசாரணைகள் செய்யவேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்த கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கடைசியாக வெளியிட்டுள்ள அறிவிப்பு ஒன்றில், "ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு பொறுப்பானவர்கள் தங்களுடைய தவறை ஒப்புக்கொண்டால், தான் உட்பட கத்தோலிக்க திருச்சபை அவர்களுக்கான மன்னிப்பை வழங்க தயாராக உள்ளதாக", தெரிவித்திருக்கிறார்.

அந்த கொடூர தாக்குதலுக்குப் பொறுப்பானவர் தனது பாவத்துக்கு மன்னிப்பு பெறுவதற்காக (பாவமன்னிப்பு) அவரிடம் வந்திருந்தாலும்கூட அவர் அவருக்கு பாவமன்னிப்பு வழங்கியே இருந்திருக்க வேண்டும்.

அப்படி அவர் இவரிடம் பாவமன்னிப்பு பெற வந்திருந்து, பாவமன்னிப்பு வழங்கியிருந்தாலும் அதனை இரகசியமாகவே வைத்திருக்க வேண்டியிருந்திருக்கும்.

அதுவல்ல நாம் இன்று இங்கே சொல்ல வருவது,

இந்த விவகாரம் தொடர்பாக நேற்றைய 'ஈழநாடு' தனது ஆசிரியர் தலையங்கத்தில் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தது,

"அமெரிக்க பிரஜைகள் கொல்லப்பட்டதன் பின்னணியில், அமெரிக்க உள்ளக உளவுத் துறையான எவ். பி. ஐ. இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்திருந்தது. இதற்கு இலங்கை அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கியிருந்தது. இதன் தொடர்ச்சியாக – எவ். பி. ஐ. டிசெம்பர் 2020இல் லொஸ்ஏஞ்சல் – மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்தது. இதன் கீழ் இந்தத் தாக்குதலுக்கு பல்வேறு வழிகளில் உதவியவர்கள் என்னும் அடிப்படையில் மூன்று முஸ்லிம் நபர்கள் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இலங்கையில் இடம்பெற்ற தாக்குதல் இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஐ. எஸ். ஐ. எஸ்.இனால் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதல் என்பதில் இரு வேறு கருத்துகள் இல்லை."

இப்போது இலங்கையில் சனல் – 4 தொலைக்காட்சியின் ஆவணப்படத்தை முன்னிலைப் படுத்தி முன்வைக்கப்பட்டுவரும் குற்றச்சாட்டுகள் ராஜபக்ஷக்கள் மீண்டும் தேர்தலில் வெற்றிய டைவதற்காகவே இந்தத் தாக்குதலுக்கு திட்டமிடப்பட்டது என்பது பற்றியது. அப்படியெனில், உண்மையில் அந்த ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்புக்கும் ராஜபக்ஷக்களுக்கும் என்ன வகையான தொடர்புகள் இருந்தன என்பது பற்றியே விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். இவ்வாறான விசாரணை என்பது இலங்கையில் மாத்திரம் செய்யப்படக்கூடியதல்ல. அது சர்வதேச அளவில் பல்வேறு தரப்புகளுடனும் நடத்தப்படவேண்டியது.

ஆனால், ஏற்கனவே தனது பிரஜைகள் கொல்லப்பட்டதன் பின்னணியில் அமெரிக்க எவ். பி. ஐ. ஏற்கனவே நடத்திய விசாரணைகளும் இலங்கை நடத்திய விசாரணை போலத்தான் நடத்தப்பட்டது என்கிறோமா?

அமெரிக்க எவ். பி. ஐ. என்ற அமெரிக்காவின் உள்ளக உளவுத் துறையை விட சிறந்த அமைப்பு ஒன்று இனி இந்த சர்வதேச விசாரணைகளில் சம்பந்தப்படவேண்டும் என்று சொல்கின்றோமா?

சனல் – 4 ஆவணப்படம் சொல்லிய விடயங்கள்பல. பிள்ளையான் குழு செய்ததாகக் கூறப்படும் பல விடயங்கள் பற்றி உதாரணமாக லசந்த விக்கிரமதுங்க, ஜோசப் பரராஜசிங்கம் கொலை போன்ற சம்பவங்கள் பற்றிய விடயங்கள் சர்வதேச தரத்தில் விசாரணை செய்யப்பட வேண்டும் என்பதில் இரு வேறு கருத்துகள் இருக்கமுடியாது.

நாளை பிள்ளையானே வந்து இவை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அப்படியெனில், அவை எல்லாவற்றையும் ஆஸாத் மௌலானாதான் செய்திருக்கிறார் என்றும் அவற்றையெல்லாம் செய்யுமாறு ஒரு தலைவர் (வேறு ஒருவர் பெயரைச் சொல்லி) இன்னுமோர் ஆவணப்படத்தில் தகவல் தந்தால் எப்படியிருக்கும்?

ஆக, முதலில் சர்வதேச விசாரணையாளர்கள் கைது செய்ய வேண்டியது இந்த மௌலானா வைத்தான். இத்தனை கொடூரமான சம்பவங்களும் நடந்த போதெல்லாம் அமைதியாக அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்கிவிட்டு, இப்போது 'அப்றூவராக' மாறிவிடுவதன் மூலம் அவர் தப்பித்துக்கொள்ள 'சர்வதேச நீதி' அனுமதிக்கப் போகின்றதா?

**- ஊர்க்குருவி.**

# கைபேசியில் வரும் குறுஞ்செய்திகள் தொடர்பில் விழிப்புடன் இருங்கள்!

### *கணினி அவசர செயல்பாட்டு பிரிவு அறிவுறுத்து*

*கொழும்பு, செப். 11*

கைபேசிகள் ஊடாக அனுப்பப்படும் போலியான குறுஞ்செய்திகள் ஊடாக தவறான தகவல்கள் பரப்பப்படுவது தொடர்பில் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இது குறித்து அவதானமாக இருக்குமாறு இலங்கை கணினி அவசர செயல்பாட்டு பிரிவு மக்களுக்கு அறிவித்துள்ளது.

தபால் மூலம் பொதிகள் கிடைத்துள்ளன என்றும் முகவரி தெளிவின்மை காரணமாக அதனைத் திருப்பி அனுப்ப வேண்டியுள்ளதாகவும் எனவே, அதனைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் கைபேசிகள் ஊடாக அனுப்பப்படும் போலியான குறுஞ்செய்திகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பணம் பெறுவதற்காக மக்களின் இரகசிய தகவல்களை பெற்று பண மோசடி செய்ய வாய்ப்புள்ளதாக இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் இலங்கை கணினி அவசர செயல்பாட்டு பிரிவு மக்களுக்கு அறிவித்துள்ளது. (ஐ)

# மகா சங்கத்தினரின் குரலுக்கும் அரசாங்கம் செவி சாய்க்கவில்லை!

### *எதிர்க்கட்சித் தலைவர் சஜித்*

*கொழும்பு, செப். 11*

*2019 ஜனாதிபதி தேர்தலிலும் 2020 பொதுத் தேர்தலிலும் வாக்குறுதியளித்ததன் பிரகாரம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த உண்மையை தற்போதைய அரசாங்கம் வெளிப்படுத்தவில்லை. மகா சங்கத்தினர் தலைமையிலான சமயத் தலைவர்கள் எவ்வளவோ குரல் எழுப்பியும் அரசாங்கம் அவர்களின் குரலுக்கு செவி சாய்க்கவில்லை - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.*

*தென்னிலங்கை பிக்குகள் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று நடந்த நிகழ்விலேயே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.*

*உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் அரசியல் ஆதாயம் மற்றும் சேறு பூசும் பிரசாரங்களிலிருந்து விடுபட்ட - முற்போக்கான - மேம்பட்ட தீர்வே தேவை. உண்மையை மட்டுமே வெளிப்படுத்த வேண்டும். அந்த உண்மையில் பொறுப்புக் கூறல் இருக்க வேண்டும். 2019 ஜனாதிபதி தேர்தலிலும் 2020 பொதுத் தேர்தலிலும் வாக்குறுதியளித்ததன் பிரகாரம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த உண்மையை தற்போதைய அரசாங்கம் வெளிப்படுத்தவில்லை. மகா சங்கத்தினர் தலைமையிலான சமயத் தலைவர்கள் எவ்வளவோ குரல் எழுப்பியும் அரசாங்கம் அவர்களின் குரலுக்கு செவி சாய்க்கவில்லை. தற்போது அனைத்தும் பொய்யாகிவிட்டது.*

*பயங்கரவாதிகளை கைது செய்ய ஆணை கிடைத்த நாள் முதல் இன்று வரை தகவல்களை மறைப்பதும் ஏமாற்றுவதுமே இடம்பெற்று வந்துள்ளதாகவும், தாம் சர்வதேச விசாரணைக்கு விரும்பமில்லை என்றாலும், இது குழப்பமாகிவிட்டதால், முறையான சர்வதேச விசாரணையின் மூலம்தான் உண்மையைப் புரிந்து கொள்ள முடியும் என நம்புவதாகவும், 2019 இல் ஆணை பெற்ற ஆட்சியாளர்கள் 220 இலட்சம் பேர் விரக்தியில் இருக்கும் இந்த நேரத்தில், வதந்திகளுக்குள் நம்மை மட்டுப் படுத்த முடியாது என்றும் இதனோடு தொடர்புடைய சகலருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் எந்த மன்னிப்பும் கிடையாது.*

*2023 முதல் 8 மாதங்களில் 563 ஆயிரத்து 400 கோடி ரூபாய் கடன் வாங்கப்பட்டுள்ளது. யானை - மனித மோதல் காரணமாக 2021, 2022 இல் யானை வேலி அமைக்க 228 கோடி ரூபாய் செலவிடப்பட்டாலும், கடந்த 5 ஆண்டுகளில் 1,867 யானைகள் உயிரிழந்தன. 618 பேர் உயிரிழந்தனர் என்றும் கூறினார்.*

*கைவராலும், சோபனத்தாலும், வாய்மொழியான பௌத்தத்தாலும் பௌத்தத்தை நம் நாட்டில் பாதுகாக்க முடியாது என்றும், பௌத்தம் பூவுலகில் யதார்த்தமாக இருக்க நடைமுறை பௌத்தராக இருக்க வேண்டும் - என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)*

# மைத்திரிபால சிறிசேன எவருக்கும் உண்மையாக இருக்க மாட்டார்!

### உதய கம்மன்பில எம். பி. தெரிவிப்பு

*கொழும்பு, செப். 11*

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன எவருக்கும் உண்மையாக இருக்க மாட்டார். சுதந்திர கட்சியை மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றிணைய முயற்சிக்கு தயாசிறி தடையாக இருந்த காரணத்தால் அவர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் - என்று பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

எதுல்கோட்டை பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சிறீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன எவருக்கும் உண்மையாக இருக்கமாட்டார் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஒரு நாள் இரவு மகிந்த ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷர்களுடன் ஒன்றிணைந்து அப்பம் சாப்பிட்டு விட்டு மறுநாள் காலை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட பொதுவேட்பாளராக போட்டியிடுவதாக அறிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக்கூட மைத்திரிபால சிறிசேன உண்மையாக இருக்கவில்லை. அரசமைப்புக்கு முரணாக மகிந்த ராஜபக்ஷவை பிரமராக்கி நாட்டில் பெரும் அரசியல் நெருக்கடிகளை தோற்றுவித்தார்.

பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து கடந்த ஜனவரி மாதம் ஹெலிகொப்டர் சின்னத்தில் புதிய அரசியல் கூட்டணியை அமைத்தோம். கூட்டணியில் ஒன்றிணைந்து செயல்படுவதாகக் குறிப்பிட்டு விட்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் உயர்நீதிமன்றம் அவருக்கு நட்டஈடு விதிக்கப்பட்டதன் பின்னர் கூட்டணியில் இருந்து விலகினார்.

சுதந்திரக் கட்சியை மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைக்கும் முயற்சியை அமைச்சு பதவி வகிக்கும் சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் முன்னெடுத்துள்ளார்கள். இதற்கு கட்சியின் உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தடையாக இருந்ததால் தற்போது அவரை கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து நீக்கியுள்ளார்.

ஆகவே, சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன இவ்வாறு செயல்பாடாமல் இருந்திருந்தால்தான் ஆச்சரியமடைய வேண்டும். பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் அரசியல் தரப்பினரை ஒன்றிணைத்து பலமான அரசியல் கூட்டணியை வெகுவிரைவில் நிறுவுவோம் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
11.09.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 25

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மக்களின் வெளியேற்றம்

ஒருபுறம் அரசியல் தீர்வு பற்றிய கற்பனைகள். மறுபுறமோ நிலம் ஆக்கிரமிக்கப்படுகின்றது - அதற்கு எதிராகப் போராட வேண்டுமென்னும் குரல்கள். அரசியல்வாதிகள் இவ்வாறு கூறிக்கொண்டிருக்கும்போது மறுபுறம் வாய்ப்புள்ள மக்களோ - எவ்வாறு நாட்டைவிட்டு வெளியேறலாமென்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

கனடிய அரசாங்கம் தற்போது குடியேற்ற நடைமுறையில் சில தளர்வுகளை ஏற்படுத்தியிருக்கின்றது. இதனை ஓர் அரிய வாய்ப்பாகக் கருதும் தமிழ் மத்தியதர வர்க்கமோ குடும்பமாக வெளியேறுவதில் தீவிரம் காட்டி வருகின்றது. ஏற்கனவே, பெருமளவானவர்கள் வெளியேறிவிட்டனர். கனடிய அரசாங்கத்தின் குடிவரவு கொள்கை ஆசியாவை அடிப்படையாகக் கொண்டது. இலங்கையைப் பொறுத்தவரையில், இந்த வாய்ப்பை - அதிகம் ஈழத் தமிழர்களே பயன்படுத்தி வருகின்றனர். காரணம், ஏற்கனவே கனடாவில் உறவினர்களை கொண்டிருப்பவர்கள் மிகவும் இலகுவாக செல்வதற்கான வாய்ப்பை கனடா வழங்கியிருக்கின்றது. இன்னொரு புறமோ, இதனை ஒரு தொழிலாக முன்னெடுக்கும் போக்கும் அதிகரித்திருக்கின்றது.

அதாவது, கனடாவில் உள்ளவர்களின் ஆதரவுடன் அவர்களிடமிருந்து கடிதமொன்றை பெறும் முகவர்கள் பெருந்தொகை பணத்தை பெற்றுக் கொண்டு கனடாவுக்கு அனுப்பும் தொழிலை முன்னெடுத்து வருகின்றனர். இந்த விடயத்தை கனடிய தூதரகம் அறியாமலும் இருக்கலாம். உதாரணமாக கனடாவில் ஒரு வியாபார நிலையத்தை நடத்தி வருபவர் தனக்கான வேலையாட்களாக சிலரை அழைக்க முடியும். இதனைப் பயன்படுத்தும் முகவர்கள் - குறித்த கனடிய நபருக்கு குறிப்பிட்டளவான பணத்தை வழங்குவதற்கு இணங்குவதன் மூலம் கனடாவின் குடியவரவு கொள்கையின் நெகிழ்ச்சியை நல்லதொரு வியாபாரமாக முன்னெடுத்து வருகின்றனர். ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு ஒரே தடவையிலேயே கனடிய தூதரகம் கடவுச்சீட்டை வழங்குகின்றது. இது குடும்பமாக நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான வாய்ப்பை வழங்குகின்றது. வடக்கு - கிழக்கிலிருந்து ஏராளமான குடும்பங்களும் தனிநபர்களும் கனடாவுக்குள் நுழைந்திருக்கின்றனர். பெரும்பாலானவர்கள் உல்லாசப் பயணர்களுக்கான கடவுச்சீட்டிலேயே செல்கின்றனர். ஆனால், அவ்வாறானர்கள் திரும்பி வரப்போவதில்லை. இதனை கண்காணிப்பதற்கான பொறிமுறையையும் கனடிய அரசாங்கம் கொண்டிருக்கவில்லை. கனடா இந்த விடயத்தில் நெகிழ்வான கொள்கை நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றது. அடுத்த ஆண்டும் 5 ஆயிரம் ஆசியர்களை அனுமதிக்கவுள்ளது. இதனையும் வடக்கு - கிழக்கு தமிழர்களே அதிகம் பயன்படுத்தப் போகின்றனர்.

ஏற்கனவே, 12 இலட்சத்துக்கு மேற்பட்ட ஈழத் தமிழ் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டனர். அவர்களே தற்போது, கனடாவிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் வாழ்கின்றனர். அவர்களின் உதவியுடன்தான் ஏனையவர்களும் தற்போது வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். இதன் மூலம், தாங்கள் வெளியேறியமை போன்று தங்களுடைய உறவினர்களையும் வெளியேற்றும் மகத்தான தேசிய பணியை புலம்பெயர் சமூகம் ஆற்றி வருகின்றது.

உண்மையில் ஒரு காலத்தில் புலம்பெயர்வு தமிழ் தேசியத்துக்கான பலமாக நோகப்பட்டது. ஆனால், தற்போது புலப்பெயர்வு தமிழ் மக்களின் இருப்பை சிதைக்கும் பணியையே திறம்பட செய்துவருகின்றது. வசதியுள்ள இடங்களைத் தேடி மக்கள் செல்வது இயல்பானது. ஆனால், அது தமிழ் சூழலை பொறுத்தவரையில் ஒரு பேராசையாக மாறிவிட்டது. வசிதியுள்ளவர்கள் - சிறந்த தொழில்களில் இருப்பவர்களும்கூட தற்போதைய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு வெளியேறுவதிலேயே குறியாக இருக்கின்றனர். இதற்கு பக்கபலமாக செயல்படும் வகையிலேயே சிலரின் அரசியல் செயல்பாடுகளும் அமைகின்றன.

வடக்கு - கிழக்கில் எப்போதும் ஏதாவதொரு பிரச்னை இருப்பதான தோற்றத்தைக் காண்பிக்கும் அரசியல் செயல்பாடுகளும் இவ்வாறான மக்கள் வெளியேற்றத்தை ஊக்குவிக்கின்றது. அடைந்தால் மகாதேவி இல்லையேல் மரணதேவி என்றவாறான அரசியல் சுலோகங்களும இறுதியில் மக்களை வெளியேற்றுவதற்கே பயன்படுகின்றது. இது நீண்டகாலத்தில் தமிழ் மக்களுக்கான நிலம் என்று ஒன்றை அடையாளப்படுத்த முடியாத நிலைமையை ஏற்படுத்தும். இறுதியில், வறுமைக்கோட்டின் கீழுள்ள மக்களே எஞ்சுவர். இதனை விளங்கிக் கொள்ள முடியாதவர்களாகவா தமிழ் தேசியர்கள் இருக்கின்றனர் அல்லது விளங்கிக் கொண்டே சிதைக்கும் பணியை செய்கின்றனரா?

# தமிழினத்துக்கு நீதி கோரி சைக்கிளோட்டம் ஐரோப்பிய பாராளுமன்றை அடைந்தது!



பாரிஸ், செப். 11

தமிழின அழிப்புக்கு நீதி கோரி பிரித்தானியாவில் ஆரம்பித்த சைக்கிளோட்ட கவனவீர்ப்பு போராட்ட குழு நேற்று ஐரோப்பிய பாராளுமன்றத்தை அடைந்தது. இதைத் தொடர்ந்து அங்கும் கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

பிரித்தானியாவில் இருந்து ஆரம்பித்த சைக்கிளோட்ட கவனவீர்ப்பு போராட்டம் நெதர்லாந்து ஊடாக பயணித்து பெல்ஜியம், ஜேர்மனி நாடுகளை கடந்து பிரான்ஸை சென்றடைந்தது.

நேற்று காலை சிற்றிகைம் நகரத்திலிருந்து அகவணக்கத்துடன் ஆரம்பித்த சைக்கிளோட்ட கவனவீர்ப்பு போராட்டம் பிரான்ஸில் அமைந்துள்ள ஐரோப்பிய பாராளுமன்றத்தை சென்றடைந்தது.

தொடர்ந்து அங்கு போராட்டம் நடைபெற்றது. தொடர்ந்தும் நீதிக்கான எழுச்சி பயணம் பிரான்ஸ் நாட்டுக்குள் தொடர்ந்தும் பயணிக்கவுள்ளது.

சர்வதேச அமைப்புகளின் கவனத்தை ஈர்க்கும் நோக்கில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிறைக் கைதிகள் தினத்தில் பல்வேறு நிகழ்ச்சி திட்டங்கள்!

கொழும்பு, செப். 11

சிறைக் கைதிகள் தினத்தை (செப். 12) முன்னிட்டு, கைதிகள் தொடர்பான செயல்திட்டங்களை மேற்கொள்ள சிறைச்சாலைகள் திணைக்களத்தின் புனர்வாழ்வு பிரிவு ஏற்பாடு செய்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடக பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இதன் பிரகாரம், அன்றைய தினம் சர்வமத நிகழ்வுகள், சுகாதார வேலைத் திட்டங்கள், விளையாட்டு மற்றும் ஆளுமை நிகழ்ச்சிகள், கல்வி மற்றும் போதனை நிகழ்ச்சிகள், குடும்ப சந்திப்புகள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான வேலைத்திட்டங்கள், கலாசார நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சிகள் சிறைச்சாலைகளுக்குள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அன்றைய தினம் அனைத்து சிறைச்சாலைகளிலும் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சிறைக் கைதிகளுக்கு விசேடமான உணவு வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், சிறைக்கைதிகளின் ஆக்கத்திறமைகளை வெளிப்படுத்தும் நோக்கில் சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும சிறைக் கைதிகள் நலன்புரி சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் சிறைப்படாத எண்ணங்கள் எனும் பெயரில் சித்திர கண்காட்சி இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் சிறைக்கைதிகள் தின தேசிய விழா 12ஆம் திகதி மாலை 2.30 மணிக்கும் நீதி, சிறைச்சாலைகள் நடவடிக்கை மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தலைமையில் கொழும்பு பொது நூலக வளாகத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

# முல்லைத்தீவு பெண் கொலை; சந்தேகநபருக்கு விளக்கமறியல்

முல்லைத்தீவு, செப். 11

புதுக்குடியிருப்பு உடையார்க்கட்டு பகுதியில் பெண்ணொருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் 07 ஆம் திகதி பெண்ணொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த 60 வயதான ஒருவரே சம்பவம் தொடர்பில் கைது செயயப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை எதிர்வரும் 19ஆம் திகதி வரை மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**செப்ரெம்பர் - 11 திங்கட்கிழமை**
**சோபகிருது வருடம் - ஆவணி 25**
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : துவாதசி




**மேடம்**
எதிர்ப்புகள் அடங்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**இடபம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். தைரியம் கூடும் நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். வாய்ப்புகள் வரும். மகிழ்ச்சியான நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். அகாரியுடன் மோதல்கள் வேண்டாமே. போராடி வெல்லும் நாள்.

**கன்னி**
தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள். வாகன வசதிப் பெருகும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். மதிப்பு கூடும் நாள்.

**துலாம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் எடுத்த வேலையை முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். உத்தயோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**மகரம்**
மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்படும். நன்மை கிட்டும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். அதிர்ஷ்டமான நாள்.

**மீனம்**
புதிய முயற்சிகள்யாவும் வெற்றி அடையும். இருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கிடைக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். நினைத்தது நிறைவேறும்.

# ஆட்சி பற்றி கவலையில்லை கொள்கைக்காக நிற்போம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்

சென்னை, செப். 11

“ஆட்சி பற்றி கவலையில்லை கொள்கைக்காக நிற்போம்” என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தி.மு.க விளையாட்டு மேம்பாட்டு அணியின் முதல் ஆலோசனைக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ்நாட்டை வெல்லலாம் என சிலர் நினைக்கிறார்கள். எந்த மாநிலத்தில் வென்றாலும், தமிழ்நாட்டில் மட்டும் ஒருபோதும் வெல்ல முடியாது. அதற்கான காரணம் தி. மு. க. என்ற வலுவான அணியும், அணியை வழி நடத்தும் கப்டன் முத்துவேல் ஸ்டாலின்.

அணிகளுக்குள் போட்டி இருக்க வேண்டும். போராட்டம், ஆர்ப்பாட்டம் என எதுவாக இருந்தாலும் போட்டியாக இருக்க வேண்டும். கலைஞருக்கு கிரிக்கெட் போட்டிகள் மீது அதிக ஆர்வம் உண்டு. முதலமைச்சர் மிகச்சிறந்த லெக் ஸ்பின்னர். விளையாட்டை இயக்கமாக முன்னெடுக்க வேண்டும்.

அணியில் பொறுப்பு கிடைக்காதவர்கள் பொறுப்பில் இருப்பவர்கள் மீது புகார் தெரிவிப்பார்கள். உங்களுக்கான ஒரே ஆதாரம் மினிட் புக் - மினிட் புக் பராமரிக்க வேண்டும்.

ஆட்சி பற்றி கவலையில்லை கொள்கைக்காக நிற்போம். 9 வருடத்திற்கு முன்னால் இந்தியாவையே மாற்றுவேன் என சொன்னார் பிரதமர். அதே போல சொன்னதை செய்துள்ளார் பிரதமர் நரேந்திரமோடி, அவருக்கு வாழ்த்துகள். ஆட்சி பற்றிக் கவலையில்லை கொள்கைக்காக நிற்போம்- என்றார். (ஐ)

# நடிகை விஜயலட்சுமி வழக்கில் சீமானுக்கு விசாரணை அழைப்பு

சென்னை, செப். 11

நடிகை விஜயலட்சுமி வழக்கில் விசாரணைக்கு முன்னிலையாகுமாறு பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர்.

நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான், தன்னை திருமணம் செய்து கொள்வதாகக் கூறி ஏமாற்றிவிட்டாரென நடிகை விஜயலட்சுமி கடந்த 2011ஆம் ஆண்டு வளசரவாக்கம் காவல் நிலையத்தில் முறைப்பாடு அளித்தார். இது தொடர்பாக பொலிஸார் 4 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தனர். பின்னர், சமரசம் ஏற்பட்டு, அந்த வழக்கு மீளப்பெறப்பட்டது.

இந்நிலையில், சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் கடந்த 28ஆம் திகதி, சீமான் தன்னை திருமணம் செய்து கொள்வதாகக் கூறி ஏமாற்றி விட்டாரெனவும் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் விஜயலட்சுமி மீண்டும் புகார் அளித்தார். இந்த புகாரின் அடிப்படையில், விஜயலட்சுமி திருவள்ளூர் நீதிமன்றத்தில் கடந்த முதலாம் திகதி முன்னிலையானார்.

இதைத் தொடர்ந்து, சீமானிடம் விசாரணைக்கு முன்னிலையாகுமாறு பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர். எதிர்வரும் 12ஆம் திகதி சீமான பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகவுள்ளார்.

# மருத்துவ கல்லூரிகள் நடத்துவதாலேயே தி. மு. க. நீட் தேர்வை எதிர்க்கிறது!

## பா. ஜ. க. தமிழக தலைவர்

சென்னை, செப். 11

தி. மு. கவினர் பலரும் மருத்துவ கல்லூரிகளை நடத்துவதால்தான், தமிழக அரசு ‘நீட்’ தேர்வை எதிர்க்கிறது என்று பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறினார்.

‘என் மண் என் மக்கள்’ என்ற பெயரில் நடைபயணம் மேற்கொண்டுள்ள அண்ணாமலை, தேனி மாவட்டத்தில் நடைபயணம் மேற்கொண்டார்.

அங்கு மக்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட அவர்,

இந்த ஆட்சியின் செயல்பாடுகளை மக்களால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. எனவே, தி. மு. கவை அப்புறப்படுத்த வேண்டும் என்றஎண்ணத்துடன், பலரும் தேர்தலுக்காக காத்திருக்கின்றனர். கஞ்சா, மது, சாதி ஏற்றத் தாழ்வுகளை ஒழிப்பதை விடுத்து, சனாதனத்தை ஒழிப்போம் என்கிறார்கள்.

மோடி அமைச்சரவையில் உள்ள 79 அமைச்சர்களில் 20 பேர் பட்டியலினத்தை சேர்ந்தவர்கள் இவர்களில் பெண்கள் 11 பேர். 25 சதவீதம் பட்டியலினத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், தமிழகத்தில் உள்ள 35 அமைச்சர்களில், 3 இடங்கள் மட்டுமே பட்டியலினத்தவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

தி. மு. க. ஆட்சியில் 23 தனியார் மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்பட்டன. இதில் 11 கல்லூரிகள் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களுடையது. அதனால் தான் தமிழக அரசு ‘நீட்’ தேர்வை எதிர்த்து வருகிறது - என்றார்.

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 6 கிலோ ஐஸ் போதை சிக்கியது!

## பெண் உட்பட நால்வர் கைது

இராமேஸ்வரம், செப். 11

இலங்கைக்கு கடத்துவதற்காக வேதாளை மீனவ கிராமத்தில் பதுக்கி வைத்திருந்தசுமார் 5 கோடி (இந்திய) ரூபாய் மதிப்பிலான 6 கிலோ ஐஸ் போதை பொருளை பறிமுதல் செய்த மண்டபம் போலீசார், பெண் உட்பட நாலு பேரை கைது விசாரித்து வருகின்றனர்.

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் அடுத்துள்ள தனுஷ்கோடி கடல் பகுதி இலங்கைக்கு மிக அருகே இருப்பதால் மண்டபம் அடுத்த வேதாளை, சீனியப்பா தர்கா மற்றும் மரைக்காயர் பட்டினம் உள்ளிட்ட கடற்கரைகளில் இருந்து இலங்கைக்கு போதை பொருட்கள் சமீபகாலமாக அதிக அளவு கடத்தப்பட்டு வருகிறது.

இதைத் தடுக்க பொலிஸ், சுங்கத்துறையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் கடந்த 7ஆம் திகதி மண்டபம் அடுத்த வேதாளை எம். ஜி. ஆர். நகரில் வசித்து ஒருவர் வீட்டில் இலங்கைக்கு கடத்துவதற்காக போதைப் பொருள் பதுக்கி வைத்திருப்பதாக தகவல் கிடைத்தது.

அங்கு நடத்தப்பட்ட சோதனையில் 6 பைக்கெற்றுக்களில் அடைக்கப்பட்டிருந்த 6 கிலோ ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது. அத்துடன், பெண் ஒருவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டனர்.

விசாரணையில் படகு மூலமாக ஐஸ் போதைப்பொருளை இலங்கைக்கு கடத்தப்படவிருந்தமை தெரிய வந்தது. (ஐ)

# விகாரைக்கு காணி சுவீகரிக்க முயற்சி தையிட்டியில் போராட்டத்துக்கு அழைப்பு

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விடுத்தது

யாழ்ப்பாணம், செப். 11

**"தையிட்டியில் சட்ட விரோதமான முறையில் விகாரை அமைத்து தமிழர்களின் காணியை சுவீகரிக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இதனை எதிர்த்து (நாளை) செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள போராட்டத்தில் அனை வரும் பங்கேற்க வேண்டும்", என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி சுகாஷ் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், "தையிட்டி பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோத விகாரை காணியை ஆக்கிரமிப்பதற்கு நில அளவைத் திணைக்களம் மற்றும் அரச அதிகாரிகள் வருகை தர இருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இந்த நில அளவீட்டு பணிகள் இடம்பெறுமாக இருந்தால் நிரந்தரமாக அந்தக் காணிகள் சுவீகரிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

"சட்டவிரோத விகாரை கட்டுமானம் மற்றும் நில அளவைப் பணிகளை எதிர்த்து செவ்வாய்க்கிழமை போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது. இந்த போராட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்", என்று அவர் கூறினார். (ஐ)



# வேலணை, நாவற்குழி மக்களுக்கு உலருணவு பொதிகள் விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 11

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் பொருளாதார ரீதியாக மிகவும் நலிவுற்ற குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கும் "அற்றார் அழி பசி தீர்த்தல்" என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. "பகிர்ந்துண்டு வாழ்வோம்" என்ற கருப்பொருளுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் இத் திட்டத்தின்கீழ் வேலணை, உரும்பிராய், நாவற்குழி ஆகிய பகுதிகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 60 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் நேற்று சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைமை அலுவலகத்தில் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் நன்கொடையாளர் நடராஜா குகானந்தன் கலந்து கொண்டு உலருணவு பொதிகளை வழங்கி வைத்துள்ளார்.

யுத்தம், கொரோனாப் பேரிடர் போன்ற காரணங்களால் ஏற்கனவே பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள், அப்பாதிப்புகளில் இருந்து மீண்டெழுவதற்கு முன்பாகத் தற்போது நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியும் சேர்ந்துகொண்டு அவர்களை மோசமாகப் பாதித்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டே தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் நன்கொடையாளர்களின் அனுசரணையுடன் கொரோனா பேரிடர் காலத்தில் ஆரம்பித்த அற்றார் அழி பசி தீர்த்தல் திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# கலாசாலை நூலகத்துக்கு நூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், செப். 11

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நூலகத்துக்கு ஒரு தொகுதி நூல்களை ஓய்வு பெற்ற ஆசிரியர் சின்னத்துரை பாலசுப்பிரமணியம் வழங்கினார்.

சிவாஜி கணேசன் பற்றி முனைவர் கா.வெ.செ மருது மோகன் எழுதிய ஆய்வு நூல் மற்றும் கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம் முழுமையான தொகுதி, மற்றும் பல நூல்கள் அடங்கிய பொதியை நூலக அபிவிருத்திக் குழு அங்கத்தவர்களான விரிவுரையாளர்களான வேல் நந்தகுமார், தர்ஷினி முத்துராஜா ஆகியோரிடம் கையளித்தார்.

கலாசாலை அதிபரின் முன்னிலையில் நடைபெற்ற இந் நிகழ்வில் நூல் தொகுதியை கையளித்த பாலசுப்பிரமணியத்துக்கு பிரதி அதிபர்களான க. செந்தில்குமரன்,த. கோபால கிருஷ்ணன் ஆகியோர் பொன்னாடை போர்த்தியும் மாலை சூட்டியும் மதிப்பளித்தனர்.

# பெண்கள் இருவர் மீது வாள்வெட்டு தாக்குதல்!

யாழ்ப்பாணம், செப். 11

வீட்டுக்குள் புகுந்த கும்பல் ஒன்று தாய் மற்றும் மகள் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

நீர்வேலியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற சம்பவத்தில் காயமடைந்த தாயும் மகளும் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

வீட்டில் தாயும் மகளும் இருந்தவேளை வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்த கும்பல் இவர்கள்மீது வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்டு விட்டு , தப்பி சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில், தனிப்பட்ட பகை காரணமாகவே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஐ)

# மூலதன சந்தை சங்கங்கள் எதிர்காலத்துக்கான முதலீடு

## பங்கு பரிவர்த்தனை பிரதம அதிகாரி

கொழும்பு, செப். 11

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவின் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் 100 பாடசாலைகளில் நிறுவப்பட்டுள்ள மூலதன சந்தை சங்கங்கள் எதிர்காலத்துக்கான முதலீடாகும் என கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரஜீவ பண்டாரநாயக்க தெரிவித்தார்.

நிதி தொடர்பான கல்வியறிவை மேம்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமான நபர்கள், மாணவர் சந்ததியே எனவும், பாடசாலைகள் ஊடாக இத்திட்டத்தை ஆரம்பிக்க ஜனாதிபதியின் தீர்மானம் காலத்திற்குப் பொறுத்தமான முடிவு எனவும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் ஜனாதிபதி ஊடகப் பிரிவால் தயாரிக்கப்பட்ட '101 கதா' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

# போக்குவரத்து பிரச்னைகள் குறித்து முறைப்பாடளிக்க புதிய இலக்கம்!

கொழும்பு, செப். 11

போக்குவரத்து அமைப்பில் நிலவும் பிரச்னைகளை தெரிவிப்பதற்காக விசேட தொலைபேசி எண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

1958 என்ற எண்ணுக்கு அழைப்பதன் மூலம் பொது மக்கள் பிரச்னைகள், விசாரணைகள் மற்றும் ஆலோசனைகளை சமர்ப்பிக்கலாம் என்று அதன் செயல் வணிக மேலாளர் எரந்த தில்ஹான் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுற்றுலா துறையை மையப்படுத்தி போக்குவரத்து சேவையை ஆரம்பிக்க இலங்கை போக்குவரத்து சபை நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உணவு மற்றும் பானம் உள்ளிட்ட சொகுசு வசதிகளை உள்ளடக்கியதாக 17 இரு அடுக்கு பஸ்கள் உருவாக்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், பெந்தோட்டை, மிரிஸ்ஸ, எல்ல - வெல்லவாய, பொலநறுவை மற்றும் உள்ளிட்ட முக்கிய சுற்றுலா இடங்களை இலக்காகக் கொண்டு இந்த பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# வகுப்பறையில் மாணவர்களின் தொகையை அதிகரிக்க ஏற்பாடு!

## இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம்

கொழும்பு, செப். 11

பாடசாலைகளில் ஒரு வகுப்பில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

மாணவர்களை உள்வாங்கும் அதிகாரம் கல்வி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்படும் வகையில் அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பிக்க தயார் என்று ஒன்றியத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஒரு பாடசாலையின் வகுப்பறையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை நீதிமன்ற உத்தரவால் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால், இது அந்த வரம்பை மீறும் மாணவர்களை அனுமதிக்க அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் அளிக்கிறது.

நீதிமன்ற உத்தரவு 2016ஆம் ஆண்டு முதல் ஒரு வகுப்பறையில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகபட்சமாக 35ஆக மட்டுப்படுத்தியுள்ளதாகவும், புதிய அமைச்சரவை பத்திரம் நீதிமன்ற உத்தரவையும் மீறுவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன் மூலம் பிரபல பாடசாலைகளின் வகுப்பறைகளில் கடுமையான நெரிசல் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நல்லூரில் தொடர்ச்சியாக இரத்ததான முகாம்!

யாழ்ப்பாணம், செப். 11

நாளை செவ்வாய்க்கிழமை முதல் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பின் வீதியில் அமைந்துள்ள யாழ். மாநகர சபையின் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் இரத்த தான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சப்பை ரத திருவிழாவான நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் இரவு 8 மணி வரையிலும் வரையிலும் , மறுநாள் தேர்த்திருவிழா, அடுத்தநாள் தீர்த்தத் திருவிழா நாட்களில் காலை 08 மணி முதல் இரவு 08 மணி வரையிலும் 15ஆம் திகதி பூங்காவன திருவிழாவன்று மாலை 4 மணி முதல் இரவு 08 மணி வரையில் இரத்த தான முகாம் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் இரத்த வங்கியில் சகல வகையான இரத்தத்துக்கு தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் ஆலயத்துக்கு வருகை தருவோர் , உயிர் காக்கும் உன்னத பணிக்கு இரத்த தானம் வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஐ)

# பாதாள உலகக் குழுவினரை ஒடுக்கும் நடவடிக்கை ஆரம்பம்!

**கொழும்பு, செப். 11**
**பாதாள உலகக் குழுக்களை ஒடுக்கும் விசேட பொலிஸ் நடவடிக்கை நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பணியில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸ், விசேட அதிரடிப் படை மற்றும் படையினர் இணைந்துள்ளனர்.**

மேல், தென் மாகாணங்களை இலக்கு வைத்து இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில், சிறப்பு அதிரடிப்படை, குற்றப் புலனாய்வுத் துறை, அரச புலனாய்வு சேவை, பொலிஸ் போதைப்பொருள் பணியகம் மற்றும் பிற பொலிஸ் பிரிவுகள் இணைந்து இந்த நடவடிக்கையை ஆரம்பித்துள்ளன. இது மறு அறிவிப்பு வரும் வரை காலவரையின்றி தொடரும்.

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தலைமையிலான குழுவால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க தெரிவித்தார்.

மாகாணங்களுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர்கள் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆகியோரும் இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக இருப்பார்கள் என்று அவர் மேலும் கூறினார்.

அறியப்பட்ட பாதாள உலகக் குழுவினர், நிலுவையில் உள்ள பிடியாணை உள்ளவர்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்களை கைது செய்வதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.

இதற்கிடையில், செயல்படும் ஆயுதமேந்திய பாதாள உலக சந்தேக நபர்கள் அனைவரையும் விசேட அதிரடிப் படையின் உதவியுடன் குறுகிய காலத்திற்குள் கைது செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.

குறிப்பாக மேல் மற்றும் தென் மாகாணங்களில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கு கடந்த 5 வருடங்களில் தமது பகுதிகளில் இடம்பெற்ற தீர்க்கப்படாத பாரிய குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணைகளை துரிதப்படுத்தவும், மூன்று மாதங்களுக்குள் சந்தேக நபர்களை கைது செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு செய்யத் தவறினால், அவர்களின் பகுதிகளில் கொலைகள் போன்ற தீர்க்கப்படாத பெரும் குற்றங்களில் அதிக விகிதங்களைக் கொண்ட பொறுப்பதிகாரிகள் இடமாற்றம் உட்பட கடுமையான விளைவுகளை ஏற்படுத்தலாம் என தென்னகோன் எச்சரித்தார். (ஐ)

# அமைச்சு பதவியை பெறுமாறு ஜனாதிபதி பலமுறை அழைத்தார்!

## தயாசிறி ஜயசேகர எம். பி.

கொழும்பு, செப். 11
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனக்கு அமைச்சு பதவியை தருவதற்காக பல தடவைகள் அழைப்பு விடுத்ததாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஆனால், ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சு பதவியை ஏற்க தான் தயாராக இல்லை என பண்டுவஸ்நுவர பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த வாரம் தான் விளையாட்டுத்துறை அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளதாக சிலர் கூறினாலும் அமைச்சு பதவியை ஏற்கத் தயாரில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# சுகாதார கொள்கைகளை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

கொழும்பு, செப். 11
நாட்டில் அனைத்து சுகாதார கொள்கைகள் தொடர்பிலும் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துக்கொண்டு கருத்துரைக்கும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை தெரிவித்தார்.

அத்துடன், நாட்டிலுள்ள அனைத்து பிரஜைகளுக்கும் மருத்துவ காப்புறுதி வழங்கப்படவேண்டும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# நாட்டில் பொருளதார வளர்ச்சி ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை!

## பொருளியல் நிபுணர் பிரியங்க

கொழும்பு, செப். 11
நாட்டில் பொருளாதார ஸ்திரதன்மை ஏற்பட்டுள்ள போதிலும் பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்பில்லை என கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பொருளியல் விரிவுரையாளர் பிரியங்க துனுசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பொருளாதார ஸ்திரதன்மை காணப்படுகின்ற போதிலும் அதன் காரணமாக பொருளாதார வளர்ச்சி சாத்தியமில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

பொருளாதார ஸ்திரதன்மையை ஏற்படுத்துவதற்கு அவசியமான சில கொள்கைகள் பலனளித்துள்ளன என்பதை ஏற்றுள்ள அவர் அதனால் பொருளாதார பணவீக்கம் மற்றும் நாணயம் மேலும் பெறுமதி குறைவதை கட்டுப்படுத்த முடிந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இந்த கொள்கைகள் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த தவறிவிட்டன. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டம் தொடர்பில் உரிய அமைப்புகள் உடன்பாட்டுக்கு வராவிட்டால் அதனால், சர்வதேச நாணய நிதியத்துடனான எதிர்காலம் பாதிக்கப்படலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# சிறைக்காவலர் கஞ்சாவுடன் கைது!

கொழும்பு, செப். 11
உடுதும்பர சிறைக்காவலர் ஒருவர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பல்லேகல பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் சிறைச்சாலை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு பல்லேகலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மாத்தளை யடவத்தை பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையவர். சம்பவம் தொடர்பில் பல்லேகல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# நல்லாட்சி அரசாங்கமே பொறுப்பு கூறவேண்டும்!

## சரத் வீரசேகர எம். பி. கூறுகிறார்

கொழும்பு, செப். 11
குறுகிய அரசியல் நோக்கத்துக்காகவே நல்லாட்சி அரசாங்கம் தேசிய பாதுகாப்பை காட்டிக் கொடுத்தது. பயங்கரவாதி சஹ்ரானை கைது செய்து முறையாக விசாரணைத்திருந்தால் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை தடுத்திருக்கலாம். குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்கு நல்லாட்சி அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் என பொது ஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாவல பகுதியில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல்- 4 வெளியிட்டுள்ள காணொலியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பொய்களின் திணிப்பு என்பதை எதிர்க்கட்சியினர் நன்கு அறிவார்கள். இருப்பினும் தங்களின் அரசியல் நோக்கத்துக்காக இதனை பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

சனல் 4 வெளியிட்டுள்ள காணொளியை நாடு என்ற ரீதியில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்த்தால் எவராலும் எதுவும் செய்ய முடியாது. கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் வெற்றிக்காக முஸ்லிம் அடிப்படைவாதிகள் தமது உயிரை தியாகம் செய்தார்கள் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்துக்கு நல்லாட்சி அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும். குறுகிய அரசியல் நோக்கத்துக்காக நல்லாட்சி அரசாங்கம் தேசிய பாதுகாப்பை காட்டிக் கொடுத்தது. அடிப்படைவாத குழுக்களுடன் தொடர்புடையவர்கள் நல்லாட்சி அரசாங்கத்தில் முன்னிலை வகித்தார்கள்.

பயங்கரவாதி சஹ்ரானை கைது செய்யுமாறு பிடியாணை பிறப்பிக்கபட்டிருந்த நிலையிலும் அரசியல் நோக்கங்களுக்காக அவர் கைது செய்யவில்லை.

குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்கு முன்னர் கிழக்கு மாகாணத்தில் 10 அடிப்படைவாத சம்பவங்கள் பதிவாகின. வனாத்தவில்லு பகுதியில் வெடிபொருட்கள் களஞ்சியசாலை கண்டுப்பிடிக்கப்பட்டது. இவ்வாறான சம்பவங்கள் குறித்து நல்லாட்சி அரசாங்கம் உரிய விசாரணைகளை முன்னெடுத்திருந்தால் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை தடுத்திருக்கலாம்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்துக்கு நல்லாட்சி அரசாங்கத்தின் தலைவர்கள், அமைச்சரவையின் உறுப்பினர்கள் உட்பட ஒட்டுமொத்த அரசாங்கத்தின் உறுப்பினர்களும் பொறுப்புக் கூற வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நல்லாட்சி அரசாங்கத்தின் அரச தலைவர்களுடன் இணக்கமாக செயற்பட்டார். ஆகவே, குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்கு பொறுப்புக் கூற வேண்டும் - என்றார். (ஐ)

# தோட்ட குடியிருப்பு மீது தாக்குதல் மனோ கணேசன் எம். பி. கண்டனம்!

கொழும்பு, செப். 11
இரத்தினபுரி வெள்ளந்துர தோட்டத்தில் குடியிருப்பு ஒன்று சேதமாக்கப்பட்டமைக்கு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் வன்மையாக கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளதுடன் அமைச்சர் ரமேஷ் பத்திரணவிடமும் இது சம்பந்தமாக கலந்துரையாடியுள்ளார்.

இ. தொ. காவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமானும் அங்குள்ள தமது பிரதிநிதி ஊடாக தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார்.

தோட்ட காணியில் சட்ட விரோதமாக குடியிருப்பு அமைக்கப்பட்டால், அதனை சட்ட ரீதியாக கையாண்டு, சட்ட ரீதியில் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டு, நீதிமன்றம் ஊடாகவே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மாறாக, தோட்ட நிர்வாகம் சட்டம், ஒழுங்கை கையில் எடுத்து செயல்பட முடியாது. நிர்வாகம் சட்ட ரீதியிலான அணுகுமுறையை கையாளவில்லை என்றும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்..

அன்று மாத்தளை, ரத்வத்தை தோட்டம் இன்று இது. பெருந்தோட்ட மக்களுக்கு வீடமைக்கவும் வாழ்வாதாரத்துக்கும் காணி உரிமை அவசியம் என்பதற்கு இது மற்றுமொரு சான்று எனவும் அவர் கூறியுள்ளார். (ஐ)

# காணி தகராறில் ஒருவர் கொலை!

கொழும்பு, செப். 11
காணி தகராறில் ஒருவர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார். அத்துடன், பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நுவரெலியா மீப்பிலிமான பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் வத்தளையை சேர்ந்த 53 வயதான எஸ். சுந்தரலிங்கம் என்பவரே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் பெண் ஒருவர் படுகயாமடைந்து நுவரெலியா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சனிக்கிழமை நடந்த இந்த சம்பவத்தில் சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளார் என்று கூறப்படுகின்றது. பொலிஸார் விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# போதைப் பொருட்களை ஒழிப்பதில் பாராளுமன்றுக்கு பெரும் பொறுப்பு!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, செப். 11

**பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை மற்றும் மதுபான பாவனை தொடர்பில் பிரச்னை காணப்படுகிறது. இதனைத் தீர்க்கும் பெரும் பொறுப்பு பாராளுமன்றத்துக்கு உள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸகுறிப்பிட்டுள்ளார்.**

**பாடசாலை மாணவர்களுக்கான பாராளுமன்ற சங்கம் கூடியபோது, எதிர்க்கட்சி தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

மேலும், போதைப்பொருள் எதிர்ப்பு அமைப்புக்கள் இது தொடர்பில் 225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெளிவுபடுத்தும் செயலமர்வை நடத்த வேண்டும். நாட்டின் அரசமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் சிறுவர் மற்றும் பெண்களின் உரிமைகள் உள்ளடக்கப்பட வேண்டும். இது ஒரு சிக்கலான மற்றும் முக்கியமான தலைப்பு என்பதால், பாராளுமன்றத்தில் இது தொடர்பாக வலுவான குரல் தேவை. சட்டவாக்கத்தில் இது முக்கியமானது என்பதால் இதில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

ஆசிரியர் சங்கங்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கங்களுடன் இணைந்து தெளிவான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும். மதஸ்தலங்கள், பாடசாலைகள் மற்றும் பாலர் பாடசாலைகளுக்கு அருகில் மதுபான கடைகளை நடத்த குறிப்பிட்ட தூர எல்லை இருந்தாலும் அந்த தூரம் தற்போது தாண்டப்பட்டுள்ளன.



திஸ்ஸமஹாராம தெபரவெள தேசிய பாடசாலை மற்றும் ஜனாதிபதி கல்லூரிக்கு அருகாமையில் மதுபானசாலை ஒன்றுள்ளது. எனவே, இந்த தூர எல்லைகளை உடனடியாக அதிகரிக்க வேண்டும். சுற்றுலாவை மேம்படுத்துவதாக கூறி பியர் அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

சில அரசியல்வாதிகள் இந்த பியர் அனுமதிப்பத்திரங்களை சுற்றுலா வலயங்களைத் தாண்டியும் வழங்கியுள்ளனர். இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இந்த சபைக்கு சிகரெட், புகையிலை, மதுபானம் தயாரிக்கும் நிறுவனங்களை அழைத்து அவர்களுடன் நேருக்கு நேர் பேசி இது தொடர்பாக கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டும். விருப்பமானால் சுய கட்டுப்பாட்டை அவர்களால் எடுக்க முடியும். இதன் மூலம் பாவனையை ஓரளவு குறைக்க முடியும்.

போதைப்பொருள் கடத்தல் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். சிறைச்சாலைக்கு உள்ளேயும் வெளியேயும் நடக்கும் இந்த கடத்தலை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். யுத்தத்தில் வெற்றி பெற்ற நாட்டில் இந்த போதைப்பொருள் பயங்கரவாதம் நிறுத்தப்பட வேண்டும். இதற்கு தேவையான பூரண ஒத்துழைப்பை நாம் வழங்குவோம் - என்றார்.

# தற்காலிக பணியாளர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்!

## இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, செப். 11

உள்ளூராட்சி நிறுவனங்களில் தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் அனைத்து தொழிலாளர்களையும் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

இந்த ஊழியர்களை நிரந்தரமாக்குவது தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன அமைச்சரவையில் பிரேரணையை சமர்ப்பிக்க உள்ளார்.

இது தொடர்பில் கருத்து மேலும் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றங்களில் தற்போது சுமார் 8 ஆயிரம் பணியாளர்கள் இருக்கின்றனர். இந்த முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர், உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் தற்காலிக, மாற்றுத் திறனாளி மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை பதவிகளில் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டார்.

மேலும், பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் கீழ் உள்ள உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் முன்னேற்ற மீளாய்வு வேலைத்திட்டத்தில் தொடர்ந்து இணைந்து கொள்வதாகவும் அதற்குரிய வேலைத்திட்டங்களை விரைவில் மேற்கொள்ளப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் கூறினார். (ஐ)

# காயங்களுடன் சடலம் மீட்பு!

கொழும்பு, செப். 11

வெல்லவாய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கங்பங்குவ பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வெட்டுக் காயங்களுடன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

வீட்டில் எவரும் இல்லாத நேரத்திலேயே உயிரிழப்பு நிகழ்ந்துள்ளது.

இந்த மரணம் தொடர்பில் வெல்லவாய பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வெல்லவாய கங்பங்குவ பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய நபரே உயிரிழந்தார். (ஐ)

# இங்கிலாந்தில் இருந்து வந்த பெண் சடலமாக மீட்பு; காதலன் கைது!

கொழும்பு, செப். 01

இங்கிலாந்தில் இருந்து காதலரை சந்திப்பதற்காக இலங்கை வந்த தமிழ் பெண் ஒருவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

கொழும்பு, கல்கிசை அல்விஸ் பிளேஸ் வீட்டுத் தொகுதியில் தங்கியிருந்த நிலையில் 13ஆவது மாடியிலிருந்து வீழ்ந்து அவர் உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

நேற்றைய தினம் இந்தப் பெண் மீண்டும் இங்கிலாந்து செல்லவிருந்த நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை 2 மணியளவில் பெண் சடலமாக மீட்கப்பட்டார்.

அவருடன், சமூகவலைதளத்தில் தொடர்பை பேணிய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் சட்டக் கல்லூரி மாணவர் என்று விசாரணையில் தெரிய வந்ததாகக் கூறப்பட்டது.

கல்கிசை பதில் நீதிவான் ரத்னா கமகே விசாரணைகளை மேற்கொண்டார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மழையால் பாதிக்கப்பட்ட வயல்களுக்கு இழப்பீடு!

## விவசாய அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, செப். 11

மழையால் சேதமடைந்த வயல்களுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக அம்பாந்தோட்டையில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நெல் செய்கை அறுவடையை நெருங்கிய நிலையில் நாசமாகியுள்ளது.



விவசாய அமைச்சின் கூற்றுப்படி, வெற்றிகரமாக பயிரிடப்பட்ட இந்த நெற்பயிர்கள் தற்போது வெள்ளத்தால் பெருமளவில் சேதமடைந்துள்ளன.

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர மழையால் சேதமடைந்த பகுதிகளை நேற்று முன்தினம் பார்வையிட்டார். வறட்சி மற்றும் மழையால் சேதமடைந்த வயல்களுக்கு இழப்பீடு வழங்கும் பணிகளை ஆரம்பிக்குமாறு விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபைக்கு பணிப்புரை விடுத்ததாக விவசாய அமைச்சர் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு அநீதி இழைக்க இடமளிக்கப்பட மாட்டாது எனவும், பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள சேதத்தை உரிய முறையில் மதிப்பீடு செய்து இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

# பல்கலை மாணவர்களுக்காக குடியிருப்பு வழங்க ஏற்பாடு!

## அமைச்சர் பிரசன்ன



கொழும்பு, செப். 11

கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களின் தங்குமிட வசதிகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட 144 குடியிருப்புகளை கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு தொகுதி மாணவர்களின் பாவனைக்காக கையளிக்கப்படவுள்ளது.

இந்த நடவடிக்கைக்கான அமைச்சரவை பத்திரத்தை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சமர்ப்பித்துள்ளார்.

அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் மேற்பார்வையின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள குறித்த குடியிருப்பு தொகுதியில் சுமார் 800 மாணவர்கள் தங்க முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# டொலரின் கிடைப்பனவு 74 வீதத்தால் அதிகரிப்பு

கொழும்பு, செப். 11

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் மாத்திரம் 49 கோடியே 92 இலட்சம் அமெரிக்க டொலர் இலங்கைக்கு கிடைக்கப்பெற்றுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்த வருடத்தின் ஜனவரி முதல் கடந்த ஓகஸ்ட் வரையிலான காலப்பகுதியில் 386 கோடியே 27 இலட்சம் டொலர் இலங்கைக்கு கிடைக்கப்பெற்றுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி கூறுகிறது.

கடந்த ஜனவரி முதல் ஜூலை வரையிலான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 74.4 வீத அதிகரிப்பை காட்டுவதாகவும் மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ஐ)

# பசும்பால் விநியோக திட்டம் கொழும்பில் இன்று ஆரம்பம்!

கொழும்பு, செப். 11

கொழும்பு நகரம் மற்றும் புறநகர் பகுதிகளில் காலை மற்றும் மாலை வேளைகளில் வீடுகளுக்கு புதிய பசும்பால் வழங்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தேசிய கால்நடை அபிவிருத்தி சபை இன்று திங்கட்கிழமை முதல் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது.

நாரஹேன்பிட்டியில் உள்ள தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் வளாகத்தில் இன்றைய தினம் இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

# பன்குளத்தில் பிள்ளையார் சிலை; இனமுறுகல் ஏற்படுத்தும் முயற்சியா?

திருகோமணமலை, செப். 11

**திருகோணமலை பன்குளத்தில் பிள்ளையார் சிலை வைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது இனமுறுகலை ஏற்படுத்தும் செயல் என்று குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.**



பன்குளம் பிரதான வீதியில் நேற்று காலை திடீரென சிலரால் பிள்ளையார் சிலை வைக்கப்பட்டது. இது தொடர்பில் மொறவெவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அங்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இனமுறுகலை ஏற்படுத்தும் நோக்கில் இந்த சிலை வைக்கப் பட்டிருப்பதாகவும், இங்கு புத்தர் சிலையோ, பிள்ளையார் சிலையோ வைக்க வேண்டாம் என்றும் அந்தப் பகுதியினர் தெரிவித்தனர் என்று கூறப்பட்டது.

(ஐ)

# தரம் - 5 மாணவர்களுக்கு விசேட கருத்தரங்கு!



மட்டக்களப்பு, செப். 11

2023 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான விசேட கருத்தரங்கு பட்டிருப்பு மாங்காடு சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் பாடசாலையின் அதிபர் சுமாருதி - பகீரதநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் மாங்காடு சரஸ்வதி மகா வித்தியாலயம், செட்டிபாளையம் மகா வித்தியாலயம், தேற்றாத்தீவு மகா வித்தியாலயம், தேற்றாத் தீவு சிவகலை வித்தியாலயம், புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலிருந்து சுமார் 150 மாணவர்கள் பங்கேற்றனர்.

(ஐ)




# சத்துருகொண்டான்படுகொலை 33ஆவது நினைவுதினம் அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு, செப். 11

சத்துருகொண்டானில் படுகொலை செய்யப்பட்டதன் 33ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று முன்தினம் மாலை பனிச்சையடி சந்தியில் உள்ள நினைவுத்தூபியில் நடைபெற்றது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா. அரியநேத்திரன், ஞா. சிறிநேசன், மட்டக்களப்பு மாநகர முன்னாள் பிரதி முதல்வர் க.சத்தியசீலன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த. சுரேஸ், சிவில் சமூக செயல்பாட்டார்களான அருட்தந்தை ஜெகதாஸ், அருட்தந்தை ரொசான், க.லவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

1990 செப்ரெம்பர் 09ஆம் நாள் மாலை இராணுவத்தினரும் முஸ்லிம் ஊர்காவல் படையும் இணைந்து முன்னெடுத்த சுற்றிவளைப்பின்போது 186 பேர் இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வால விக்னேஸ்வரர் ஆலய பெருந்திருவிழா ஆரம்பம்!

காரைதீவு, செப். 11

காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

திருவிழா குரு சிவாகம வித்யா பூஷணம் சிவசிறீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் சிவாச்சாரியார்கள் கொடியேற்ற பூசையை சிறப்பாக நடத்தினார்கள்.

ஆலய தர்மகர்த்தா இ. தவராசா உள்ளிட்ட பரிபாலன சபையினர் இந்த திருவிழாவை சிறப்பாக நடத்த சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டார்கள்.

தொடர்ச்சியாக 10 நாட்கள் பகல் இரவு திருவிழாக்கள் இடம் பெற்று இறுதி நாள் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவத்துடன் திருவிழா நிறைவடையும். (ஐ)



# நாவல் பழம் பறிக்க மரமேறிய சிறுவன் தவறிவிழுந்து காயம்

கொழும்பு, செப். 11

நாவல் பழம் பறிக்கச் சென்ற சிறுவன் மரத்தில் இருந்து தவறி விழுந்து படுகாயமடைந்தார்.

திருகோணமலை - மூதூர் - நடுத்தீவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 14 வயதான எஸ். சகான் என்பவரே படுகாயமடைந்தார்.

இவர் நண்பர்களுடன் நாவல் மரத்தில் ஏறி நாவல் பழம் பறித்துக் கொண்டிருக்கும்போது தவறி விழுந்துள்ளார்.

காயங்களுக்குள்ளான குறித்த சிறுவன் சிகிச்சைக்காக மூதூர் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தற்போது நாவல்பழ பருவ காலம் என்பதால் பெற்றோர்கள் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் அவதானமாக செயல்படுமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (ஐ)

# கல்முனை முகைதீன் பள்ளிவாசலில் பொலிஸார் நேற்று சிரமதானம்!

கல்முனை, செப். 11



இலங்கை பொலிஸ் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டு 157ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்முனை முகைதீன் ஜும்மா பள்ளிவாசல் வளாக பகுதியை சுத்தப்படுத்தும் முகமாக சிரமதான நிகழ்வு நேற்று முன்னெடுக்கப் பட்டது.

இந்நிகழ்வு கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக வழிகாட்டலினூடாக கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன், இந்த சிரமதான நடவடிக்கையின் போது கல்முனை மாநகர சபையும் பொலிஸாருடன் இணைந்து கொண்டதுடன் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்குடனும் டெங்கு நோயின் தாக்கத்தை இந்தப் பிரதேசத்தில் கட்டுப்படுத்தும் முகமாகவும் தேங்கிக் காணப்பட்ட கழிவுகள் குப்பைகூழங்கள் காடுமண்டிய இடங்கள் யாவும் அகற்றி சுத்தப்படுத்தி பள்ளிவாசல் வளாக சூழல் அழகுபடுத்தப்பட்டது.

மேலும் இச்சிரமதான நடவடிக்கையின் போது கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பல்வேறு குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதான பொலிஸ் பரிசோதகருமான எம்.எல் றபீக், கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ. வாஹிட், கல்முனை முகையதீன் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் மருத்துவர் எஸ்.எம்.ஏ அஸீஸ், பொலிஸ் ஆலோசனை குழுவின் பொதுச்செயலாளரும் காணி மத்தியஸ்த சபை பிரதான மத்தியஸ்தருமான எம்.ஐ.எம் ஜிப்ரி (எல்.எல்.பி) மற்றும் ஆலோசனை குழுவின் உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர். (ஐ-01)

# மொரோக்கோ நில நடுக்கம்; 2 ஆயிரம் மக்கள் உயிரிழப்பு

காசாபிளாங்கா, செப். 11

**மொராக்கோ நாட்டில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் சிக்கி உயிரிழந்தோர் தொகை 2 ஆயிரத்தைக் கடந்தது. மீட்பு பணிகள் தொடர்கின்றன.**

**மொராக்கோ நாட்டில் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 11.11 மணிக்கு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 6.8புள்ளி என்ற அளவில் பதிவாகியுள்ளது. நிலநடுக்கத்தால் வீடுகள், பல்வேறு கட்டிடங்களில் இருந்தவர்கள் அச்சத்தால் வெளியேறினர்.**



நிலநடுக்கத்துக்கு 2 ஆயிரத்து 12 பேர் உயிரிழந்தனர். 300இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் சிறிய காயங்களுக்கு உள்ளாகினர்.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அந்த நாட்டை சேர்ந்த பாதுகாப்பு படையினர், பொலிஸார், தீயணைப்புப் படையினர் இணைந்து மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இரவு, பகலாக அங்கு மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

நாட்டின் தலைநகர் ரபாத் முதல் மாரகேஷ் பகுதி வரை நிலநடுக்கத்தால் சேதம் ஏற்பட்டுள்ளது. நாட்டில் அதிக சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் பகுதிகளிலும் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் பல இடங்களில் வீடுகள், கட்டடங்கள் தரைமட்டமாயின.

ரபாத் முதல் காசாபிளாங்கா நகரம் வரை நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பான பகுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தலைநகர் ரபாத் பகுதியிலிருந்து தென்மேற்கு பகுதியான மாரகேஷ் பகுதியை மையமாகக் கொண்டு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்காவைச் சேர்ந்த புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தின் அதிர்வுகள் ரபாத், காசாபிளாங்கா, எஸ்ஸாஅவுரா பகுதிகளிலும் நன்றாக உணரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் அல்-ஹைவுஸ், தரோவ்டனட் மாகாணங்களைச் சேர்ந்தவர்கள். அதேபோல் குவார்ஸாஸாட், சிக்கவ்வா, அஸிலால், யூசோபியா, மாரகேஷ், அகாதிர், காசாபிளாங்கா பகுதிகளிலும் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட உயிரிழப்பு மட்டுமே தற்போது கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ளது. நிலநடுக்கத்தால் இடிந்த கட்டிடங்களின் மதிப்பு குறித்து கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை. (ஐ)



# ஹொங்கொங்கில் மழை; பெரும் வெள்ளப்பெருக்கு

ஹொங்கொங், செப். 11

ஹொங்காங்கில் கடந்த 140 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கனமழை பெய்துவருவதால் பெரு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள.

ஹொங்காங் நகரத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வரலாறு காணாத கனமழை பெய்தது. கடந்த 140 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இந்த மழை 158.1 மில்லிமீட்டர் அளவில் பதிவானதாக ஹாங்காங் வானிலை கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது. 1884ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்த அளவு மழை பதிவாகியிருப்பது இதுவே முதல் முறை. இந்த கனமழையால் ஹொங்காங் சாலைகளில் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. பல குடியிருப்புகள் வெள்ளத்தில் மூழ்கின.

பாடசாலைகள், அலுவலகங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. மேலும் பொது மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று தஞ்சமடையுமாறு அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். சாலையில் விழுந்து கிடக்கும் மரங்கள், குப்பைகளை அகற்றும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

ஹொங்காங் நகரின் முக்கிய அடையாளங்களில் ஒன்றான கிராஸ் ஹார்பர் சுரங்கப்பாதையும் வெள்ளநீரில் மூழ்கியுள்ளது. குடியிருப்புகளில் சிக்கியவர்களை மீட்புக் குழுவினர் படகுகளின் உதவியைக் கொண்டு மீட்டு வருகின்றனர். (ஐ)

# 3ஆவது புவி சுற்றுவட்டப்பாதையில் ஆதித்யா விண்கலம் நிலைநிறுத்தம்!




சிறீஹரிகோட்டா, செப். 11

சூரியனை ஆய்வு செய்வதற்காக இந்தியா ஏவிய ஆதித்யா எல் 1 விண்கலம் மூன்றாவது புவி சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டது.

சிறீ ஹரிகோட்டாவில் இருந்து கடந்த 2ஆம் திகதி இந்த விண்கலம் சுற்றுவட்டப் பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது.

இந்நிலையில், விண்கலம் 3ஆவது புவி சுற்று வட்டப்பாதைக்கு வெற்றிகரமாக செலுத்தப்பட்டதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. மேலும், 15ஆம் திகதி அடுத்த சுற்றுவட்டப்பாதைக்கு மாற்றம் செய்யப்படும் என்றும் இஸ்ரோ தெரிவித்துள்ளது. (ஐ)

# மருத்துவமனைகளில் சைபர் கிரைம் தாக்குதல்!

கலிபோர்னினா, செப். 11

அமெரிக்க மருத்துவமனைகளின் கணினிகளில் சைபர்கிரைம் தாக்குதல் நடத்தப்பட்டது. அமெரிக்காவின் கலிபோர்னியா, டென்னசி உள்பட 5 மாகாணங்களின் அரச, தனியார் மருத்துவமனைகளில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் 900இற்கும் மேற்பட்ட கணினிகளில் இருந்து சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேரின் தகவல்கள் திருடப்பட்டன என்று கூறப்படுகிறது.

இதனையடுத்து சைபர் கிரைம் தாக்குதல் நடத்தப்பட்ட மருத்துவமனைகளின் ‘சேர்வர்’கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

அங்கிருந்த நோயாளிகள் உடனடியாக வேறு மருத்துவமனைகளுக்கு மாற்றப்பட்டனர். இதனால் சுகாதார சேவைகள் பெரிதும் முடங்கின. இந்தத் தாக்குதல் தொடர்பில், அமெரிக்காவில் வசிக்கும் ரஷ்யாவை சேர்ந்த 9 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# உலக நாடுகளின் தலைவர்கள் காந்தி நினைவிடத்தில் அஞ்சலி!

புதுடில்லி, செப். 11

ஜி-20 உச்சி மாநாட்டின் இரண்டாம் நாளான நேற்று காலை உலகத் தலைவர்கள் டில்லி ராஜ்கோட் பகுதியில் அமைந்துள்ள இந்திய தேசபிதா காந்தியின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர்.

ஜி-20 அமைப்பின் இந்த ஆண்டுக்கான தலைமையை இந்தியா ஏற்றிருக்கிறது. இதையடுத்து, நாடு முழுவதும் பல்வேறு மாநாடுகள் நடைபெற்றன. இந்நிலையில், ஜி-20 உச்சி மாநாடு டில்லியில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. இதில், அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரிட்டிஷ் பிரதமர் ரிஷி சுனக் உட்பட பல்வேறு உறுப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று காலை டில்லி ராஜகாட் பகுதியில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்துக்கு உலகத் தலைவர்கள் வருகை தந்தனர். மழைக்கு நடுவே வருகைதந்த தலைவர்களை பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றார்.




ஐ.நா. பொது செயலாளர் அன்ரனியோ குட்ரெரஸ், சர்வதேச நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜார்ஜிவா, வங்கதேச பிரதமர் ஷேர் ஹசினா, சிங்கப்பூர் பிர்டஹமர் லீ ஸிங் லூங் ஆகியோர் முதலில் ராஜ்காட் வந்தடைந்தனர். காந்தி நினைவிடத்துக்கு வந்த ஒவ்வொரு தலைவரையும் அங்கவஸ்திரம் அணிவித்து பிரதமர் மோடி வரவேற்றார். காந்தி குடில் பின்னணியில் அவர்களுக்கு பிரதமர் மோடி அங்கவஸ்திரம் அணிவித்தார். பின்னர் தலைவர்கள் காந்தி நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர்.

காந்தி நினைவிடத்தில் செருப்பு அணிவது மரியாதை நிமித்தமாக தடை செய்யப்பட்டுள்ள நிலையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் ஷூக்களை தவிர்த்து தட்டையான கால் கவசத்தை அணிந்துகொண்டார். பிரிட்டிஷ் பிரதமர் ரிஷி சுனக், பிரான்ஸ் அதிபர் மேக்ரான் ஆகியோர் தங்கள் ஷூ, சாக்ஸ் ஆகியனவற்றை அப்புறப்படுத்திவிட்டு சென்றனர். அங்கேபக்திப் பாடல் ஒலிக்கப்பட்டது. பின்னர் தலைவர்கள் மௌன அஞ்சலி செலுத்தினர். (ஐ)

# உர மானியத்துக்கு பதிலாக நிதி நிவாரணம் அளிக்க முடிவு

## விவசாய அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, செப். 11

**எதிர்வரும் பெரும்போகத்தில் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உர மானியத்துக்கு பதிலாக நிதி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

உரங்களை இறக்குமதி செய்து பற்றாக்குறையின்றி போதுமான தொகையை சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

அனைத்து அங்கீகாரம் பெற்ற உர இறக்குமதியாளர்களுக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் பெரும்போகத்தில் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உர மானியத்துக்கு பதிலாக நிதி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, உரத்தை இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு அவற்றை மானியமாக வழங்கும் செயல்பாட்டிலிருந்து தாம் விலகியுள்ளதாக விவசாய அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)

# உருளைகிழங்குக்கான வரி மேலும் நீடிக்கும்!

கொழும்பு, செப். 11

இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்கு மீது விதிக்கப்பட்டுள்ள விசேட பண்ட வரியை மேலும் நான்கு மாதங்களுக்கு நீடிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்குக்கு ஒரு கிலோவுக்கு 50 ரூபாய் விசேட பண்டவரி அறவிடப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு மார்ச் 8 ஆம் திகதி முதல் இந்த வரி அறிவிடப்பட்டு வருகிறது.

இந்நிலையில், இந்த வரி 6 மாத காலத்துக்கு விதிக்கப்பட்டிருந்த நிலையில் இதனை மேலும் 4 மாதங்களுக்கு நீடிக்க நிதியமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி, நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக, இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு கிலோ கிராம் ஒன்றிற்கு 20 ரூபாய் என்ற விசேட பண்ட வரி விதிக்கப்பட்டிருந்த நிலையில், அதனை மார்ச் முதல் உயர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பருவமழை அதிகரிப்பால் பல பகுதிகள் பாதிக்கப்படும்!

கொழும்பு, செப். 11

தென்மேற்கு பருவமழை தீவிரம் காரணமாக நாடு முழுவதும் பல பகுதிகள் பாதிக்கப்படும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஒக்ரோபர் 10, 11ஆம் திகதிகளில் மழையுடன் கூடிய கால நிலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும், காலி, மாத்தறை, புத்தளம், கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சுமார் 100 மில்லிமீற்றர் மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் கணித்துள்ளது.

களு, குடா, ஜின் மற்றும் நில்வலா ஆறுகளில் ஏற்படும் சிறு வெள்ளப்பெருக்குகள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசன திணைக்களம், தாழ்நில பிரதேசங்களில் வாழும் மக்களை கோரியுள்ளது.

www.river.net.lk என்ற இணையத்தளத்தில் இருந்து ஆறுகளின் நீர்மட்டம் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளலாம். குறிப்பாக, களு மற்றும் களனி ஆறுகளை அண்டியுள்ள பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# குருநாகல் மக்கள் மத்தியில் கண்கலங்கிய தயாசிறி!



கொழும்பு, செப். 11

சிறீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் அதன் உறுப்பினர்களை விட்டு ஒருபோதும் விலகப் போவதில்லை என்று கூறிய பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மக்கள் மத்தியில் கண் கலங்கினார்.

குருநாகலில் உள்ள கட்சி பணிமனையில் மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் நாயகம் பதவியிலிருந்து அண்மையில் நீக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று முன்தினம் குருநாகல் ஹெட்டிபொலவில் உள்ள அவரது பிரதான பணிமனைக்கு சென்றார் .

அவரை வரவேற்க வீதியின் இருபுறமும் கட்சி உறுப்பினர்கள் திரண்டிருந்தனர். கூட்டத்தில் உரையாற்றும் போது தயாசிறி உணர்ச்சிவசப்பட்டு கண் கலங்கினார்.

அங்கு உரையாற்றிய அவர், "இந்தக் கிராமத்தில் இருந்து அரசியலை தொடங்கினேன். செயலாளராக இருந்து ஜனாதிபதி சொன்னதைச் செய்தேன். கட்சியில் இருந்து நீக்குமாறு கோரியபோது அதற்கு இணங்கினேன். ஒழுக்காற்று விசாரணை நடத்தச் சொன்னபோது ஒழுக்காற்று விசாரணை நடத்தினேன். இன்று கட்சியை விட்டு வெளியேறி அமைச்சர் ஆனவர்களும் உள்ளனர். கட்சி அர்ப்பணிப்புள்ள நபர் வெளியில் இருக்கிறார்.

"கட்சியின் தலைவர் யாரையும் விரட்டலாம். ஆனால், கட்சிக்காக என்னை தியாகம் செய்ததை நினைவில் வையுங்கள். கட்சி எடுக்கும் முடிவுகளுக்கு சம்மதித்து கட்சித் தலைவருக்கு கீழ் படிந்தேன் நின்றேன். என்னை நாய் போல் வெளியே விட முடியாது. நானும் தலைவரும் அப்பா மகன் போன்றவர்கள். சில கெட்ட நண்பர்கள் எனது தந்தையுடன் நெருங்கிப் பழகினர். தயாசிறி ஜயசேகரவை அழிக்க நினைத்தார்கள். என கூறினார்.

# கலால் சட்டத்தை திருத்த நடவடிக்கை!



கொழும்பு, செப். 11

கலால் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

தற்போது கலால் சட்டத்தில் பல குறைபாடுகள் காணப்படுவதாகவும் குறைபாடுகள் சரி செய்யப்பட்டு விரைவில் திருத்தங்கள் சமர்ப்பிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

"100 ஆண்டுகளுக்கும் மேலாக நமது நாட்டில் உள்ள மிகப் பழமையான அரசாணைகளில் ஒன்று கலால் வரிச்சட்டம். அந்த காலகட்டத்தின் தேவைக்கேற்ப ஆயிரத்துக்கும் மேற்பட்ட கலால் அறிவிப்புகளுடன் அவ்வப்போது புதுப்பிக்கப்படும் சட்டம் இது. அதிக எண்ணிக்கையிலான பூச்சுகள் பூசப்பட்ட நோயாளியைப் போல, இந்த சட்டம் உள்ளது . முடிவில்லாத ஓட்டைகள் உருவாக்கப்பட்டுவிட்டன. இந்த ஓட்டைகள் அனைத்தையும் மூடி, உண்மையான அரசாங்க வருவாயைப் பெறுவதற்கு தேவையான புதுப்பிப்புகளைச் செய்வோம் என்று நம்புகிறோம். அதனால்தான் கலால் சட்டத்தை மாற்றுவதற்குத் தேவையான பணிகளைச் செய்து வருகிறோம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# சீன பொறியிலாளர்கள் அரச பணியில்; பரவும் தகவல்கள் உண்மை இல்லை!

## இலங்கை மின்சார சபை அறிவிப்பு

கொழும்பு, செப். 11

நுரைச்சோலை லக்விஜய மின் உற்பத்தி நிலையத்துக்கு சீன பொறியியலாளர்களை அரசாங்கம் பணியில் இணைக்கவுள்ளனர் என்று வெளியான தகவல்கள் உண்மைக்கு புறம்பானது என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

தற்போது மின்சார சபையில் வெற்றிடமாகவுள்ள பணியிடங்களுக்கு உள்ளூர் பொறியியலாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு, அந்த குழுவில் இருந்து பொருத்தமான பொறியியலாளர்களை இணைத்துக் கொள்ள தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்த சபை தெரிவிக்கின்றது.

நேர்முகத் தேர்வில் கலந்து கொண்ட 400க்கும் மேற்பட்டவர்களில் 19 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும், ஆட்சேர்ப்புக்கு தேவையான அனுமதியை பெறுவதற்கான ஏற்பாடுகள்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், அடுத்த ஆண்டும் வறட்சியான ஆண்டாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளதால், தனியாரிடமிருந்து தேசிய மின்கட்டமைப்பிற்கு குறைந்த விலையில் மின்சாரத்தை பெற மின்சார சபை தீர்மானமொன்றை மேற்கொண்டுள்ளது.

அடுத்த வருடம் மே மாதத்துக்குள் 40 நிலக்கரி கப்பல்கள் இலங்கையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், நிலக்கரி கொள்முதல் முன்னேற்றம், நிதி நிலைமை மற்றும் அடுத்த 12 மாதங்களுக்கான மின் உற்பத்தித் திட்டங்கள் குறித்த கலந்துரையாடலின்போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஈஸ்டர் தாக்குதல்: 21, 22 இல் விவாதம்

கொழும்பு, செப். 11

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான விவாதத்தை எதிர்வரும் 21, 22 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளன.

திர்க்கட்சிகளால் கொண்டு வரப்பட்ட இந்தப் பிரேரணையை ஏற்று இந்த இருநாள் விவாதத்தை நடத்த பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு தீர்மானித்துள்ளது. (ஐ)

## இந்தியா...

பிரபல ஊடகவியலாளர் எஸ். கே. ராஜெனுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தமிழீழத்தை அடைய முடியும் என்று நம்பித்தான் அன்று ஆயுதப் போராட்ட இயக்கங்களை நோக்கி நாம் சென்றோம். அன்று, இந்திய தரப்பால் பலர் நேரடியாகக் கூறியிருந்தார்கள் நாங்கள் எந்த சந்தர்ப்பத்திலும் ஒரு தனிநாடு வருவதை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று. இது ஒவ்வொரு இயக்கங்களுக் கும் தனித்தனியாக சொல்லப்பட்டது. மிகத் தெளிவாக இந்திய அரசின் மிக உயர்ந்த மட்டங்களிலிருந்து இது சொல்லப்பட்டது. இருந்தாலும் நாங்கள் - அன்றிருந்த அரசு கூறலாம் வருங்காலங்களில் அதற்கு சாதகமான நிலை வரும் என்று கருதினோம்.

பூகோள அரசியல் தென்கிழக்காசியாவில் மாறும்போது எங்களுக்கு சாதகமான நிலைமை

வரலாம். அப்போது எங்கள் இலக்கை - அபிலாசைகளை அடையலாம் என்ற நம்பிக்கையுடன் நாம் போராடினோம். இதிலே எவ்வித சந்தேகமும் இருக்கவில்லை. இருக்கின்ற பிரச்னைகளை உணர்ந்து கொண்டுதான் நாம் வேலை செய்தோம்.

யுத்தத்தின் போக்கு மாறியது. அது மாத்திரமல்ல ஏறக்குறைய அரைவாசிக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து சென்றமை. அது ஒரு வகையில் பலமாக இருந்தாலும் - போராட்டத்துக்கு வலு வைக் கொடுத்தாலும் பலவீனத்தையும் கொடுத்தது. இங்கு மக்கள் இல்லை. சாத்வீக போராட்டங்களில் கூட மக்கள் வருவதில்லை. இது மக்கள் போராடிக் களைத்து விட்டார்கள் என்பதல்ல. மக்கள் இங்கு இல்லை. இளைஞர்கள் குறைவு - இருப்பவர்கள் பலரும் மேற்குலக நாடுகளுக்கு போவது பற்றிய கனவுகளுடன் இருக்கிறார்கள். 1970 களில் இருந்த இளைஞர்கள் இன்று இல்லை.

அன்றைய இளைஞர்கள் போராட்டத்தில் இணைத்துக் கொள்வதில் உறுதியாக இருந்தார்கள். 1983இன் பின்னர் போராட்டங்களில் ஆயிரக் கணக்கானவர்கள் இணைந்தார்கள். பெற்றோர்கள் கொண்டுவந்து தங்கள் பிள்ளைகளை எங்கள் முகாம்களிலே விட்டுச் சென்றார்கள். இன்று அப்படியான நிலைப்பாடு இல்லை. இங்கிருக்கும் நிலைமையை பார்க்கும்போது பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் வெளிநாடு சென்று வசதியாக வாழ வேண்டும் என்று நினைக்கிறார்களே தவிர, அவர்களுக்கு சரியான தமிழ்த் தேசியப் பற்று இல்லை என்று கூறவில்லை - அதற்காக தங்கள் பிள்ளைகளை அர்ப்பணிக்கத் தயாராக இல்லை. கடந்த காலத்தைப் போல இளைஞர்களும் போராட்டங்களில் ஆர்வம் காட்டவில்லை.

இவ்வாறான நிலையில், பூகோள சரித்திரம் மாறுமானால் - இந்தியா - சீனா முறுகல் நிலை கூடுமாக இருந்தால் அப்போது தனிநாடு வரலாம். அப்போது நாங்கள் பலமான அமைப்புகளை வைத்திருக்க வேண்டும். ஆயுத அமைப்புகளை கூறவில்லை - அரசியல் அமைப்புகளையே கூறுகிறேன். அப்போதே அடுத்த கட்ட நகர்வை செய்ய முடியும்.

இதற்கு முன்னதாக கட்டுக்கோப்பான சமூகத்தை உருவாக்க நாங்கள் முயற்சிகளை எடுக்க வேண்டும் - இதை இப்போது நாங்கள் செய்து வருகிறோம் - என்றார். (ஐ)

## கிழக்கு...

அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்கவை சந்தித்து நேரடியாக தெரியப்படுத்தினார். மேலும் பல முதலீட்டு திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முழு உலகுக்குமான ஐக்கிய அரபு இராச்சியத்தின பரந்துபட்ட எரிபொருள் விநியோக கட்டமைப்பின் கிழக்கு ஆசியாவுக்கான விநியோகத்தை இலங்கையை கேந்திர மையமாக கொண்டு முன்னெடுக்கும் திட்டத்துக்கு முழுமையான ஆதரவை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் இலங்கையில் பெரும் எரிபொருள் களஞ்சியசாலையை நிறுவவும் இங்கிருந்து கிழக்கு ஆசியாவுக்கான ஏற்றுமதிகளை நெறிப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் மீள்புதுப்பிக்கதக்க எரிசக்தி திட்டம், சுற்றுலா மற்றும் நட்சத்திர உணவக திட்டங்கள் தொடர்பிலும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக்கான தூதுவர் கலந்துரையாடியுள்ளார்.

இதேவேளை விவசாயத்துறையை நவீனமயமாக்கவும், இலங்கைக்கான எமிரேட்ஸ் விமான சேவைகளை அதிகரிக்கவும் இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தங்களை விரைவில் கைச்சாத்திடவும் இரு தரப்புகளும் இணங்கியுள்ளன. (ஐ)

## சொகுசு...

சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தை சேர்ந்தவரும் கோப்பாயில் மோட்டார் திருத்தகம் நடத்துபவருமான ரொபின் என்பவரே உயிரிழந்தார் என்று பொலிஸார் கூறினர்.

விபத்தையடுத்து அதிசொகுசு பேருந்தின் சாரதி அங்கிருந்து ஓடிச் சென்றுள்ளார். அந்தச் சமயம் பேருந்தில் பயணிகள் இருந்தனர். விபத்தையடுத்து ஆத்திரமடைந்த மக்கள் பேருந்தை தாக்கினர் என்றும் அவர்களை தாம் கலைத்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், விபத்தில் இறந்தவரின் உடலை மீட்டு யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைத்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## விசாரிப்பதற்கு...

பிரதான சூத்திரதாரி ஒருவர் இருக்கிறார் என்று முன்னாள் சட்டமா அதிபர் இதே போன்ற குற்றச்சாட் டொன்றை முன்வைத்துள்ளார்.

இந்நிலையில், இந்தப் பிரச்னைகளை பரந்தளவில் கவனத்துக்கு கொண்டு வந்து அவற்றை விரைவாக தீர்ப்பதற்காக, இந்தத் தூண்டுதல் ஏற்படுத்தும் கூற்றுக்களை விசாரிப்பதற்காக பாராளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்கவும் அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

தற்போதைய நிலைமையின் தீவிரத் தன்மைக்கு ஏற்ப தற்போது முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களையும் விரிவாக மீளாய்வு செய்ய ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழு அறிக்கை மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கைக்கு மேலதிகமாக, எதிர்காலத்தில் வெளியிடப்படவுள்ள இந்த இரண்டு அறிக்கைகளும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளன.

சரியான மற்றும் தீர்க்கமான நட வடிக்கைக்கு வழி வகுத்து, நிலைமையைப் பற்றிய தெளிவான புரிதலை சட்டம் இயற்றுபவர்களுக்கு வழங்குவதே இந்த விரிவான செயல்முறையின் நோக்கமாகும்.

உண்மையை கண்டறிவதற்காக இந்த முக்கியமான விசாரணைகள் நடத்தப்படும் இதேவேளை, பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்பதே ஜனாதிபதி அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## துஷ்பிரயோகம்...

வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் என்பதோடு அவரின் மனைவி பாலர் பாடசாலை ஆசிரியையாவார்.

சந்தேகநபர் 3, 4 மற்றும் 5ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்களை நடத்துவதோடு , அவரது மனைவி முதலாம் மற்றும் இரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு மேலதிக வகுப்பினை நடத்துகின்றார். இவர்கள் இருவர் தமது வீட்டிலேயே மேலதிக வகுப்புக் களை நடத்தியுள்ளனர். கணவன் வீட்டிற்குள் காணப்படும் அறையொன் றிலும் , மனைவி வீட்டிற்கு வெளியிலும் வகுப்புக்களை நடத்தியுள்ளனர். இவ்வாறானதொரு சூழலிலேயே சிறுமி குறித்த ஆசிரியரால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமியின் உடல் ரீதியான மாற்றங்களை அவதானித்த அவரது தாயார், சிறுமியை மருத்துவ சிகிச் சைக்காக அழைத்து சென்ற போதே தனது மகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியமையை அறிந்து கொண்டுள்ளார். இது தொடர்பில் சிறுமி வழங்கிய தகவலின் அடிப்படையில் குறித்த ஆசிரியர் சந்தேக நபராக அடையாளம் காணப்பட்டுள்ளார். ஆனால், அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அவரது பெற்றோர் முன்வரவில்லை. காரணம் சமூகம் தொடர்பான அச்சமும் அதனால் ஏற்படக்கூடிய அவமானமும் அவர்களை முற்போக்காக சிந்திக்க இடமளிக்கவில்லை.

இதனால் அந்த பெற்றோர் அங்கிருந்து இடம்பெயர்ந்து பிறிதொரு பிரதேசத்தில் குடியமர்ந்தநோடு அதே பிரதேசத்திலுள்ள பாடசாலையில் தனது மகளை சேர்த்துள்ளனர். குறித்த சிறுமியை முதலில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய வைத்தியர் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்குமாறு பெற்றோரிடம் தெரிவித்துள்ள போதிலும் அவர்கள் மகளின் எதிர்காலம் கருதி அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை எனத் தெரியவருகிறது.

எவ்வாறிருப்பினும் கடந்த ஓகஸ்ட் மாதம் குறித்த சிறுமி சுகயீனமடைந்தமையடுத்து , அவரின் தாயார் அவரை அருகிலுள்ள ஆதார மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளார். இதன் போது மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையில் சிறுமி எய்ட்ஸ் (எச்.ஐ.வி.) தொற்றுக்கு உள்ளானமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் சிறுமியை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய மருத்துவர்கள் பெற்றோரிடம் மேலதிக தகவல்களைக் கோரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்துள்ளனர்.

மருத்துவர்களின் முறைப்பாட்டுக்கமைய கடந்த ஓகஸ்ட் 23ஆம் திகதி சந்தேகநபரான ஆசிரியர் கைது செய்யப்பட்டு 24ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஐ)

## ஈஸ்டர்...

தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் தற்போதைய அரசாங்கமே உள்ளது என வெளிக் கொணரப்பட்டுள்ள விடயங்கள் என்பது எங்களுக்கு ஒன்றும் புதிதல்ல.

இது ஓர் ஆச்சரியமான விடயமும் அல்ல. சனல் 4 காணொலியில் உள்ள விடயங்களை அடிப்படையாக கொண்டு தாக்குதலின்போது இடம் பெற்ற உயிரிழப்புகள் மற்றும் சேதங்கள் காரணமாக நாட்டின் தெற்கு பகுதியில் உள்ள சிங்கள மக்களும் பாதிக்கப்பட்டிருந்தார்கள்.

எவ்வாறாயினும் ஆட்சிப்பீடம் ஏறுவதற்கும் ஆட்சி அதிகாரங்களை தக்கவைத்துக்கொள்வதற்கும் அதனை வெற்றி கொள்வதற்கும் இராணுவத்தைப் பயன்படுத்தி இவர்கள் எந்தவோர் உச்சக்கட்டத்துக்கும் செல்வார்கள்.

தமது மக்களையும் இழப்பதற்கு தயார் என்பதை சரியான கோணத்தில் அறிந்துகொள்ள முயற்சித்தால் இந்த தாக்குதலின் பின்னணி குறித்த உண்மைகள் அனைத்தையும் சிங்கள மக்கள் விளங்கிக்கொள்வார்கள் என நான் நினைக்கிறேன்.

மேலும், நாட்டின் உள்ளக விசாரணைகள் மூலம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணி தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் யார் என்பதை அறிந்து கொள்ள முடியுமா என்பது கேள்விக் குறியாகும்.

பாராளுமன்றத்தில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அரசாங்கத்துக்கு ஆதரவாகவே பெரும்பான்மை காணப்படுகிறது. இந்த பெரும்பான்மை, அரசாங்க தரப்பினரையே இன்று சனல் 4 நிறுவனம் குற்றவாளிகளாக அடையாளப்படுத்தியுள்ளது.

தாக்குதலின் பின்னணியில் ராஜபக்ஷ தரப்பினரே உள்ளனர் என்பதை இந்த காணொலி மிகத் தெளிவாக குறிப்பிட்டுள்ளது. இந்நிலையில், குற்றம் சாட்டப்பட்ட ராஜபக்ஷ தரப்பினரே பாராளுமன்றத்தில் தெரிவுக் குழுவை அமைத்து விசாரணைகளை மேற்கொள்வது என்பது வேடிக்கையானது. அதாவது குற்றவாளி ஒருவர் தன்னுடைய குற்றத்தையே தானே விசாரிப்பது போன்றது. இது போன்ற முட்டாள்தனமான விடயத்துக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது - என்றார். (ஐ)

## சிறாரின்...

தாக்கத்தை ஏற்படுத்தும் - இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரெஞ்ச் சிவில் அறிவுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதியாக அண்மையில் மார்க்-அன்ட்ரூ பிரெஞ்ச் நியமிக்கப்பட்டார். இவர் பல தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்தி வருகிறார்.

இந்நிலையில், கொழும்பில் மனித உரிமைகள் செயல்பாட்டாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மனித உரிமைகள் விவகாரம், சூழலியல் பாதுகாப்பு, தேர்தல்களை நடத்துவது தொடர்பில் இதன்போது கருத்துகள் வெளியிடப்பட்டன.

இதைத் தொடர்ந்து உரையாற்றிய ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி,

நிலைபேறான அபிவிருத்தி இலக்கு களை அடைந்துகொள்வதில் இலங்கை எதிர்மறையான திசையில் (பின்னடைவு) பயணிப்பதாகவும், அண்மையகாலங்க ளில் சிறுவர்கள் மத்தியில் அதிகரித்து வரும் மந்தபோசணைக்குறைபாடு நாட்டின் எதிர்காலத்தில் பெரும் தாக் கத்தை ஏற்படுத்தும்.

நாட்டின் இயக்கம் இளைஞர்களை மையப்படுத்தியதாக அமையவேண்டும். இருப்பினும் இங்கு பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானோர் மிகவும் வயது மூத்தவர்களாக இருக்கின்றனர் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# சுகாதார துறை அமைச்சர் பதவி நீக்கப்படவேண்டும்!

## செல்வம் எம். பி. தெரிவிப்பு

மன்னார், செப். 11

**மக்களுடைய வாழ்க்கையுடன் விளையாடிக் கொண்டிருக்கும் தற்போதைய சுகாதார அமைச்சர் உடனடியாக பதவி நீக்கம் செய்யப்பட்டு, இளமையான புதிய ஒருவர் சுகாதார அமைச்சராக நியமிக்கப்படும் பட்சத்திலேயே இந்த பிரச்னைக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும் என்று பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**



மன்னாரில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், எமது நாட்டை சேர்ந்த பல ஆயிரக்கணக்கான மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறி உள்ளனர். இதனால் எமது மக்கள் பல்வேறு பிரச்னை களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

வட மாகாணத்தை பொறுத்த வரையில் தலைமை தாங்குகின்ற மருத்துவர்கள் தமது பிரச்னைகளை வெளியே கூறி உள்ளனர். அவர்கள் விடாமுயற்சியுடன் செயல் பாட்டாலும் கூட நிலவுகின்ற வைத்திய பற்றாக் குறையை ஈடுசெய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அரச மருத்துவமனைகளில் வழங்கப்படுகின்ற மாத்தி ரைகள் போலியானவை என்றும் முறைப்பாடுகள் கிடைக் கப் பெறுகின்றன. சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக் வெல போலியான மருந்துகள் இறக்குமதி செய்து அந்த பணத்தை தனது பொக்கெற்றுகளில் நிரப்பியுள்ளார்.

இதனடிப்படையில் ஒட்டு மொத்த நாடுகளையும் சுகாதார அமைச்சர் ஏமாற்றியது மட்டுமின்றி இதற்கு ஆதரவாக வாக்களித்தவர்களும் ஒட்டுமொத்த நாட்டையும் மக்களையும் ஏமாற்றி உள்ளனர்.

இந்த பிரச்னையில் இருந்து மீண்டு எழ வேண்டுமாக இருந்தால் சுகாதார அமைச்சர் மாற்றப்பட வேண்டும். அவர் வெற்றி பெற்று விட்டார் என்ற எண்ணத்துடன் இருக்க முடியாது. அரசை காப்பாற்றுவதற்காக அவரை வெற்றி பெற செய்துள்ளனர். அவற்ற மாற்றப்பட வேண் டும். அல்லது அவர் இராஜிநாமா செய்ய வேண்டும்.

மக்களின் வாழ்வு பிரச்னையாக அமைந்துள்ளது. உயிர் சம்பந்தமான பிரச்னை. இதில் விளையாட முடி யாது. எனவே ஜனாதிபதி இவ்விடயத்தில் கவனம் செலுத்தி இவ்வாறானவர்களை வெளியேற்றி சுகாதார துறைக்கு நல்ல இளமையானவர்கள் அமைச்சராக நியமித்து ஏற்பட்டுள்ள பிரச்னையை மீட்டெடுக்க துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

அத்துடன், மன்னாரில் தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற வன்முறை சம்பவங்களை கட்டுப்படுத்த பொலிஸார் துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். மன்னார் நொச்சிக்குளத்தில் கடந்த வருடம் இருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து நொச்சிக்குளம் கிராம மக்களிடையே அமைதி இன்மை ஏற்பட்டுள்ளது.

அந்த மக்கள் நிம்மதியின்றி தவிக்கின்றனர். மன்னா ரில் உள்ள ரவுடி கும்பல் ஒன்று குறித்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது. இதனால் ஒரு கிராம மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர். இது தொடர்பில் பாதுகாப்புக்கு பொறுப்பான அமைச்சருடன் கதைக்கவுள்ளோம். இந்த கொலை சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட வேண்டும் - என்றார். (ஐ)

# தபால் திணைக்களத்தின் பெயரால் நிதி மோசடி!



கொழும்பு, செப். 11

தபால் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் போன்று போலியான இணையத்தளம் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிதி மோசடி தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தபால் பொதிகளை வழங்குவதாக தெரிவித்து மக்களிடம் பணம் வசூலிக்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்ப உதவிப் பணிப்பாளர் காயத்ரி பெர் னாண்டோ தெரிவித்தார்.

இது போன்ற சம்பவங்கள் குறித்து 1950 எனும் இலக்கத்திற்கு அழைத்து தகவல்களை வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனை தவிர, 0112 542 104, 0112 334 728 மற்றும் 0112 235978 எனும் தொலைபேசி இலக்கங்களுக்கும் அழைத்து தகவல்களை வழங்க முடியும்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் கணினி குற்றத் தடுப்பு பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக காயத்ரி பெர்னாண்டோ குறிப்பிட்டார். (ஐ)

# கொழும்பு பேரா ஏரியை சுத்தம் செய்கிறது ஜப்பான்!

கொழும்பு, செப். 11

கொழும்பில் உள்ள பேரா ஏரியை ஆறு மாதங்களுக்குள் இலவசமாக சுத்தம் செய்ய ஜப்பானிய நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது.

பேரா ஏரி நீர் சுத்திகரிப்பு திட்டத்துக்காக ஜப்பானிய நிறுவனம் 30 இலட்சம் டொலர்களை ஒதுக்கியுள்ளது.

கொழும்பு கலஹாரி ஹோட்டலில் நடைபெற்ற ‘சேவ் பேரா’ திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ஜப்பானிய நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி மசாசி ஒட்சு கூறுகையில்,

பேரா ஏரியின் ஆழத்தில் ஒட்சிசன் பற்றாக்குறையால் பற்றீரியா செயல்பாடு செயலிழந்துவிட்டது.

ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பிரத்தியேக இயந்திரங்களின் உதவியுடன் பெய்ரா ஏரியின் அடிப்பகுதிக்கு ஒட்சிசன் விநியோகம் மேம்படுத்தப்பட்டு பற்றீரியாவின் செயல்பாடு மேம்படுத்தப்பட்டு அந்த பற்றீரியாக்களின் உதவியுடன் நமது நீர் சுத்தப்படுத்தப்படுகிறது - என்றார். (ஐ)

# துப்பாக்கி சூட்டில் ஒருவர் படுகாயம்!

கொழும்பு, செப். 11

இரத்மலானை புகையிரத நிலையத்துக்கு அண்மையாக நேற்று இடம்பெற்ற துப்பாக்கி சூட்டில் ஒருவர் படுகாயமடைந்தார்.

இதில் காயமடைந்த 46 வயதுடைய நபர் களுபோவில போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# கைவிலங்குகளுடன் பெண் ஒருவர் கைது!

கொழும்பு, செப். 11

எம்பிலிப்பிட்டி - மொரகெட்டிய பகுதியில் வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது கைவிலங்குகளை வைத்திருந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தவலுக்கு அமைய குறித்த பெண்ணின் வீட்டை பொலிஸார் நேற்று காலை சோதனையிட்டுள்ளனர்.

கைதானவர், 24 வயதுடைவர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். குறித்த பெண்ணின் பணப்பையில் அந்த கைவிலங்குகளை மறைத்து வைத்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாராளுமன்ற தெரிவு குழு நடுநிலையாக நடத்தப்படும் என்று எதிர்பார்க்க முடியாது!

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு



கொழும்பு, செப். 11

பாராளுமன்ற தெரிவுக்குழு மூலம் முன்வைக்கப்படும் விடயங் கள் இதுவரையில் எந்த சந்தர்ப்பத்திலும் எதிர்பார்த்த முடிவுகள் எட்டப்படவில்லை. இதற்கு பின்னரும் பாராளுமன்ற தெரிவுக் குழுவின் ஊடாக இந்த விசாரணை நடுநிலையாக நடத்தப்படும் என எதிர்பார்க்க முடியாது. அவற்றில் எமக்கு நம்பிக்கை கிடையாது. எனவே சனல் - 4 வெளிக்கொணர்வு தொடர்பில் சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளக் கூடிய முறையான விசாரணைகளே அவசியம். அதற்கமைவாகவே விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

மக்களால் நிராகரிக்கப்பட்ட பாராளுமன்றம் ஒன்றே தற்போது நாட்டில் உள்ளது. இந்த பாராளு மன்றம் தொடர்பில் நாட்டு மக்களிடத்தில் நம்பிக்கை இல்லாமல் போயுள்ளது. அதேபோன்று தான் சுகாதார அமைச்சருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கை யில்லா பிரேரணை தோற்கடிக்கப்பட்டாலும் பிரேணையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு தீர்வு கிடைத்து விட்டதா?

மருந்து தட்டுப்பாடு பிரச் னைக்கு தீர்வு கிடைத்துள்ளதா? மூளைசாலிகள் நாட்டை விட்டு வெளியேறுகின்றமை தடுக்கப் பட்டுள்ளதா?

தரமற்ற மருந்துகள் மூலம் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு நியாயம் கிடைத்துள்ளதா? இல்லை. எந்தவொரு பிரச்னைக்கும் தீர்வு கிடைக்கவில்லை. நிரா கரிக்கப்பட்ட பாராளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மையானவர்கள் ஆதரவு மூலம் பிரேரணை தோற்கடிக்கப்பட்டுள்ளது. அது மாத்திமே இடம்பெற்றுள்ளது.

எவ்வாறாயினும் சுகாதார துறையில் ஏற்பட்டுள்ள நெருக் கடிகளுக்கு முகங்கொடுத்து துன்பப்படும் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கவில்லை.

அதேபோன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சனல் 4 காணொலி மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயம் என்ன? இதனூடாக சர்வதேச சமூகம் என்ன எதிர்பார்க்கிறது? இந்த தாக்குதலின் பின்னணியில் சந்தேகங்களும், குழப்பங்களும் காணப்படுகிறது.

இதனை ஆராய வேண்டியுள்ளது. இதில் பாரிய பொறுப் போன்று இருக்கிறது. தாக்குதல் சம்பவம் இடம்பெற்று நீண்ட நாட்கள் கடந்துள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்க பெறவேண்டும். குறிப் பாக இந்த செய்தியை வெளிப்படுத்தியவர்கள் மீது சாடுவதை நிறுத்தி விட்டு அதில் என்ன விடயம் கூறப்பட்டுள்ளது என கண்டறிந்து உண்மைகளை வெளிக்கொணர வேண்டும்.

நாட்டு மக்கள், சர்வதேசம் நம்ப கூடிய நியாயமானதும், சுயாதீன மானதுமான சர்வதேச விசாரணையே மேற்கொள்ள வேண்டும்.

பாராளுமன்ற தெரிவுக் குழு அமைத்து இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பல விசாரணைகள் மறைக்கப்பட்டுள்ளன. இதுவே உண்மையும் கூட. இவற்றின் மூலம் முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் நம்பிக்கை இல்லை - என்றார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கொன்வே, மிட்செல் சதம் நியூசிலாந்து அபாரவெற்றி!

கார்டிஃப், செப். 11

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் டெவன் கொன்வே, டரில் மிட்செல் ஆகியோரின் அதிரடி சதத்தால் நியூசிலாந்து அணி 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கார்டிஃப் நகரில் வெள்ளி இரவு நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 291 ஓட்டங்கள் குவித்தது.

அணித்தலைவர் ஜோஸ் பட்லர் 68 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகளுடன் 72 ஓட்டங்கள் விளாசினார். டேவிட் மலன் 54, பென் ஸ்டோக்ஸ் 52, லியாம் லிவிங்ஸ்டன் 52 ஓட்டங்கள் சேர்த்தனர்.

நியூசிலாந்து அணி சார்பில் ரச்சின் ரவீந்திரா 3, டிம் சவுதி 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

292 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 45.4 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 297 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. டெவன் கொன்வே 121 பந்துகளில், ஒரு சிக்ஸர், 13 பௌண்ட்ரிகளுடன் 111 ஓட்டங்களும் டரில் மிட்செல் 91 பந்துகளில், 7 சிக்ஸர்கள், 7 பௌண்ட்ரிகளுடன் 118 ஓட்டங்களும் விளாசி ஆட்டமிழக்காமல் இருந்தனர். இவர்கள் இருவருக்குமே சர்வதேச போட்டிகளில் இது 4ஆவது சதமாக அமைந்தது.

3ஆவது விக்கெட்டுக்கு இந்த ஜோடி கூட்டாக 180 ஓட்டங்கள் சேர்த்தது. முன்னதாக வில் யங் 29, ஹென்றி நிக்கோல்ஸ் 26 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.




8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி 4 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது.



## பீலேயின் சாதனையை முறியடித்தார் நெய்மர்!

பிரேசிலியா, செப். 11

பிரேசில் அணிக்காக அதிக கோல்கள் அடித்தவர் என்ற பீலேயின் சாதனையை முறியடித்தார் நெய்மர்.

2026ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பிபா உலகக் கிண்ண உதைபந்து தொடருக்கான தகுதி சுற்று தொடங்கியுள்ளது.

இதில் தென்னமெரிக்க அணிகளுக்கான தகுதி சுற்றில் நேற்றுமுன்தினம் பிரேசிலின் பெலெம் நகரில் நடைபெற்ற ஆட்டத்தில் பிரேசில் - பொலிவியா அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் பிரேசில் 5-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அந்த அணி தரப்பில் றொட்றிகோ (24 மற்றும் 53ஆவது நிமிடங்கள்), நெய்மர் (61 மற்றும் 90 3 நிமிடங்கள்) ஆகியோர் தலா 2 கோல்களும் ரஃபின்ஹா (47-வது நிமிடம்) ஒரு கோலும் அடித்தனர்.

இந்த ஆட்டத்தில் இரு கோல்கள் அடித்ததன் மூலம் பிரேசில் அணிக்காக அதிக கோல்கள் அடித்திருந்த மறைந்த ஜாம்பவான் பீலேவின் சாதனையை முறியடித்துள்ளார் நெய்மர்.

3 முறை உலகக் கிண்ணத்தை வென்றிருந்த பீலே 92 ஆட்டங்களில் விளையாடி 77 கோல்கள் அடித்திருந்தார். தற்போது நெய்மர் 78 கோல்கள் அடித்து பிரேசில் அணிக்காக அதிக கோல் அடித்தவர்களின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார். (ஐ)

## அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் கோகோ கௌஃப் சம்பியன்!



நியூயோர்க், செப். 11

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் அமெரிக்க இளம் வீராங்கனை கோகோ கௌஃப் சம்பியன் பட்டம் வென்றார்.

ஆண்டின் இறுதி கிராண்ட்ஸ்லாம் போட்டியான அமெரிக்க ஓப்பன் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் மகளிர் ஒற்றையர் இறுதிச் சுற்றில் பெலாரஸைச் சேர்ந்த அரனா சபலென்கா - கோகோ கௌஃப் நேற்று மோதினர்.

இதில் 19 வயதான அமெரிக்க இளம் வீராங்கனை கோகோ கௌஃப் சம்பியன் பட்டம் வென்றார்.

அவர், 2-6, 6-3, 6-2 என்ற செற் கணக்கில் சபலென்காவை வீழ்த்தினார். அமெரிக்க இளம் வீராங்கனை ஒருவர் அமெரிக்க ஓப்பன் ரென்னிஸில் பட்டம் வெல்வது 24 ஆண்டுகளில் இதுவே முதல்முறை.

இந்த நூற்றாண்டில் அமெரிக்க ஓப்பன் பட்டத்தை வென்ற முதல் அமெரிக்க இளம் வீராங்கனை கோகோ கௌஃப் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## சொந்த மண்ணில் இந்தியாவை வீழ்த்துவது முடியாத காரியம்!

### சொஹைப் அக்தர்

லாகூர், செப். 11

இந்திய கிரிக்கெட் அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்துவது முடியாத காரியமாக இருக்கும் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சொஹைப் அக்தர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணியில் பந்து வீச்சு சகலதுறை வீரர் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒருநாள் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் ஒக்ரோபர் 5ஆம் திகதி இந்தியாவில் தொடங்குகிறது. நவம்பர் 19ஆம் திகதி வரை 10 நகரங்களில் நடைபெறவுள்ள இந்தத் தொடரில் இலங்கை, நடப்பு சம்பியன் இங்கிலாந்து, போட்டியை நடத்தும் இந்தியா, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், நெதர்லாந்து ஆகிய 10 நாடுகள் பங்கேற்கின்றன.

இந்தத் தொடரில், ஒக்ரோபர் 14ஆம் திகதி இந்தியா மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகள் அகமதாபாத் மைதானத்தில் பலப்பரீட்சை மேற்கொள்ள உள்ளன. இந்நிலையில், அக்தர் தனது கருத்தை தெரிவித்துள்ளார்.

"இந்தியாவில் நடைபெற உள்ள உலகக் கோப்பை தொடரில் சம்பியன் பட்டத்தை வெல்லும் விருப்ப அணிகளில் ஒன்றாக பாகிஸ்தான் பார்க்கப்படுகிறது. இந்தியாவில் இந்தியா அணியை வீழ்த்துவது முடியாத காரியம். இந்தியாவில் பாகிஸ்தான் அணி விளையாடினாலும் அதேநிலை தான். அதற்கு காரணம் இரண்டு அணிகளும் ஆசிய அணிகள். வேகப்பந்து வீச்சு, சுழல்பந்து வீச்சு, துடுப்பாட்டம் என அனைத்திலும் சம பலத்தில் இந்த அணிகள் உள்ளன. பாகிஸ்தான் அணியில் பந்துவீச்சு சகலதுறை வீரர் இல்லை.

முன்பு பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்டம் கொஞ்சம் ஏமாற்றம் அளித்தது. ஆனால், இப்போது அணியின் துடுப்பாட்டம் நிலை பெற்றுள்ளது. இந்த அணி நிலையாக விளையாடி இலக்கை எட்டும் வல்லமை பெற்றுள்ளது" என்றார். (ஐ)

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ்

## ஜோகோவிச் - மெத்வதேவ் இறுதியில் இன்று மோதல்!

நியூயோர்க், செப். 11

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சேர்பியாவின் நோவக் ஜோகோவிச், ரஷ்யாவின் டானியல் மெத்வதேவ் ஆகியோர் இறுதிப் போட்டிக்கு முன்னேறினர்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்று வரும் இந்த தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் முதல்நிலை வீரரான ஸ்பெயின் கார்லோஸ் அல்கரஸ், 3ஆம் நிலை வீரரான ரஷ்யாவின் டேனியல் மெத்வதேவுடன் மோதினார்.

3 மணி நேரம் 19 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் டேனியல் மெத்வதேவ் 7-6 (7-3), 6-1, 3-6, 6-3 என்ற செற் கணக்கில் அல்கரஸை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றோர் அரையிறுதியில் 2ஆம் நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜோகோவிச், 47ஆம் நிலை வீரரான அமெரிக்காவின் பென் ஷெல்டனுடன் மோதினார்.

அமெரிக்க ஓபன் தொடர்களில் ஜோகோவிச்சுக்கு இது 100ஆவது ஆட்டமாக அமைந்திருந்தது. 2 மணி நேரம் 41 நிமிடங்கள் நடைபெற்ற இந்த மோதலில் ஜோகோவிச் 6-3, 6-2, 7-6 (7-4) என்ற நேர் செற் கணக்கில் எளிதாக வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் நுழைந்தார். 3 முறை சம்பியனான ஜோகோவிச் இறுதிப் போட்டியில் கால்பதிப்பது இது 10ஆவது முறையாகும்.

23 கிராண்ட் ஸ்லாம் பட்டங்கள் வென்றுள்ள ஜோகோவிச், அமெரிக்க ஓப்பன் இறுதிப் போட்டியில் 2022ஆம் ஆண்டு சம்பியனான டேனியல் மெத்வதேவுடன் பலப்பரீட்சை நடத்தினார். இதில், மெத்வதேவ் வெற்றி பெற்று சம்பியனானார்.

இன்று திங்கட்கிழமை இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது. (ஐ)






ஈழநாடு



# ஜி - 20 மாநாடு: கூட்டுத் தீர்மானம் நிறைவேற்றுவதில் இந்தியாவுக்கு இருந்த சவால்கள்

உக்ரேன் மீதான ரஷ்யாவின் போர் உள்ளிட்ட பல விஷயங்கள் உலக நாடுகளுக்கு இடையே பல்வேறு முரண்களை உருவாக்கியுள்ளன.

இந்நிலையில், இந்தியா தலைமையேற்று நடத்திய ஜி20 மாநாட்டில் ஒருங்கிணைந்த கூட்டுத் தீர்மானத்தைக் கொண்டு வருவது சவாலானது எனப் பேசப்பட்டது. ஆனால், அந்த சவால்களைக் கடந்து அதை இந்தியா வெற்றிகரமாகச் செய்துள்ளது.

பல்வேறு விஷயங்களில் ஒருங்கிணைந்து செயல்பட ஜி20 நாடுகள் முடிவெடுத்திருந்த நிலையில், வெள்ளிக்கிழமை மாலை, ஜி20 மாநாட்டை நடத்தும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் சந்தித்தார்.

பல்வேறு நாட்டுத் தலைவர்கள் இந்த உச்சி மாநாட்டில் பங்கேற்கின்றனர் என்ற போதிலும், ரஷ்ய அதிபர் விளாதிமிர் புடின் மற்றும் சீன அதிபர் ஷி ஜின்பிங் ஆகியோர் பங்கேற்கவில்லை.

நாடுகளுக்கு இடையே நிலவும் முரண்பாடுகளைக் கடந்து, ஒரு கூட்டுத் தீர்மானத்தை இந்த மாநாடு நிறைவேற்ற வேண்டும் என இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வந்தது.




ஐரோப்பிய ஒன்றியமும், உலகின் பொருளாதார ஆற்றல் மிக்க 19 நாடுகளும் இணைந்து உருவாக்கியுள்ள அமைப்புதான் ஜி20.

கடந்த ஆண்டு இந்தோனீசியாவில் நடைபெற்ற ஜி20 உச்சி மாநாட்டின் போது உக்ரேன் மீதான போர், உலக நாடுகளுக்கு இடையே பல விதங்களில் முரண்பாடுகளை உருவாக்கியது.

ஆனால் அதற்குப் பிறகு உலக நாடுகளின் நிலை மேலும் மோசமடைந்து வருகிறது. உக்ரேன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யாவை கண்டித்து தெளிவான பிரகடனத்தை ஜி20 உச்சி மாநாடு வெளியிட வேண்டும் என மேற்கத்திய நாடுகள் உறுதியான நிலைப்பாட்டை எடுத்திருந்தன. ஆனால், அதற்கு சீனாவும், ரஷ்யாவும் உடன்படவில்லை.

ஷி ஜின்பிங், புடின் ஆகியோர் இந்த மாநாட்டில் பங்கேற்காத நிலையில், அதற்குப் பதிலாக ரஷ்யாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் செர்கீ லாவ்ரோஃப் மற்றும் சீன பிரதமர் லீ கியாங் ஆகியோர் பங்கேற்றுள்ளனர். ஆனால் அவர்களின் தலைவர்களைக் கலந்தாலோசிக்காமல் எந்த முடிவுக்கும் உடன்படும் அரசியல் பலம் அவர்களுக்கு இல்லை.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் நடைபெற்ற ஜி20 நாடுகளின் நிதி அமைச்சர்கள் மாநாட்டிலும் உக்ரேன் போர் காரணமாக கூட்டுத் தீர்மானத்தை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டது.

இதற்கிடையே, தெற்குலக வளரும் நாடுகள் குறித்து மிகுந்த கவனம் செலுத்தி வரும் இந்தியா, இந்த கவனத்தை உக்ரேன் போர் பாதிக்காது என்றே இன்னும் நம்புகிறது. எனவே அதைப் பற்றி அதிகம் பேச இந்தியா விரும்புகிறது.

ஜி20 நாடுகள் உலகப் பொருளாதாரத்தில் 85 சதவீத





இடத்தையும், வர்த்தகத்தில் 75 சதவீத இடத்தையும் பெற்றுள்ளன. இதேபோல் உலக மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் இந்நாடுகளில்தான் வாழ்கின்றனர்.

மேலும், ஜி20 கூட்டமைப்பில் இடம் பெறாத நாடுகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் என நிர்பந்திப்பதன் மூலம் தெற்குலக நாடுகளின் வளர்ச்சி குறித்து உறுதியான குரல் எழுப்பும் நாடாக இந்தியா தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறது.

ஜி20 கூட்டமைப்பில் ஆப்பிரிக்க ஒன்றியமும் இடம் பெற்றுள்ளது. வளரும் நாடுகள் குறித்து இந்தியா அக்கறை காட்டுவதற்கு மேலும் வலுசேர்த்துள்ளது.

ஏழை நாடுகளுக்கான கடன் உதவித் திட்டங்களை மாற்றியமைப்பது குறித்து ஜி20 நாடுகள் ஏற்கெனவே கடந்த 2020ஆம் ஆண்டு ஒரு உடன்பாட்டை எட்டியிருந்தன. ஆனால், சீனா எப்போதும் ஒரு தடையாக இருப்பதாக மேற்கத்திய நாடுகள் தொடர்ந்து குற்றம் சாட்டி வரும் நிலையில், அந்நாட்டு அரசு மறுப்பு தெரிவித்து வருகிறது.

இருப்பினும், சீனாவுடன் எல்லைப் பிரச்னைகைளைக் கொண்டுள்ள இந்தியா, கடன் திட்டங்களை மாற்றியமைக்க வலியுறுத்தி வரும் நிலையில், வளர்ந்த நாடுகளிடம் இருந்து மேலும் பல வாக்குறுதிகளைப் பெற முயலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்படி தெற்குலக நாடுகளுக்கான கடன்களைத் திருப்பிச் செலுத்த காலக்கெடுவை அதிகரிப்பது தொடர்பான கோரிக்கையை ஐரோப்பிய ஒன்றியமும் ஏற்கெனவே ஆதரித்துள்ளது.



அதேநேரம், வளரும் நாடுகளின் கடன் சுமைகைளுக்கு சீனாவே காரணம் என மேற்கத்திய நாடுகள் குற்றம் சுமத்தினால், இந்த உச்சி மாநாட்டின் முழு வெற்றிக்கு அது ஒரு தடையை ஏற்படுத்தும்.

கிரிப்டோகரன்சிகள் மீதான உலகளாவிய கட்டுப்பாடு, உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்களின் மறுசீரமைப்பை இந்தியா விரும்புகிறது. இவை குறித்த விவாதங்களும் மிகக் குறைந்த அளவிலேயே இந்த மாநாட்டில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்டது.

காலநிலை மாற்றம் மற்றும் அதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து இந்தியா மீண்டும் மீண்டும் பேசி வருகிறது. மோசமான வானிலை பாதிப்புகளால் சில ஏழ்மையான நாடுகள் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளன என்றும் இந்தியா கூறுகிறது.

‘காலநிலை மாற்றத்தைத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஏழ்மையான நாடுகள் பல சவால்களை எதிர்கொள்ளும் போது, அவற்றைச் சமாளிக்க வளர்ந்த நாடுகள் உதவவேண்டும்,” என்று வியாழக்கிழமையன்று வெளியான ஒரு கட்டுரையில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்திருந்தார்.

காலநிலை மாற்றத்தைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளுக்கு நிதியுதவி அளிப்பது தொடர்பாக ஜி20 நாடுகளுக்கு இடையே நிலவும் முரண்பாடுகளை அவரது கட்டுரை பிரதிபலிக்கிறது.

வளரும் நாடுகள் பசுமைக்குடில் வாயு வெளியேற்றத்தைத் தடுப்பதற்கான இலக்குகளை நோக்கிப் பயணிக்க விரும்பவில்லை. அது அந்நாடுகளின் வளர்ச்சிக்கு மிகப் பெரும் தடைக்கல்லாக இருக்கும் என்ற அச்சம் நிலவுகிறது.

மேலும், தொழில் மயமான நாடுகள்தான் காலநிலை மாற்றத்துக்கான காரணம் என இந்த நாடுகள் புகார் தெரிவிக்கின்றன. இதனால், காலநிலை மாற்றத்தைத் தடுக்கும் நடவடிக்கைகளுக்கான செலவினங்களில் பெரும் பங்கை தொழில்மயமான நாடுகள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அது மட்டுமல்லாமல், பசுமைக்குடில் வாயு வெளியேற்றத்தைத் தடுக்கும் வகையிலான தொழில்களுக்குத் தேவையான தொழில்நுட்பங்களை வளர்ந்த நாடுகள் அளிக்கவேண்டும் என்று கோருகின்றனர்.

ஜி20 மாநாட்டில் உக்ரேன் போர் குறித்து தீர்மானமான கூட்டறிக்கை வெளியாகவில்லை என்றால், அது அந்த மாநாட்டுக்கும், இந்தியாவுக்கும், பிரதமர் நரேந்திர மோடிக்கும் ஒரு பின்னடைவாக அமையும் என வில்சன் சென்டர் சிந்தனைக் குழுவின் மைக்கேல் குகல்மேன் போன்ற சில ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்திருந்தனர்.



ஆனால், ஒன்றுக்கொன்று ஒத்துப் போகாத நாடுகளுடன் இணைந்து செயல்பட்டு இந்தியா சாதனை படைத்திருப்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

“ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுடனான தனது உறவுகளை வெற்றிகரமாக இந்தியா நிர்வகித்து வருகிறது,” என்கிறார் அவர்.

பிரிக்ஸ் (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா) மற்றும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு போன்ற பிற கூட்டமைப்புகளை சீனா ஊக்குவித்து வருகிறது. அண்மையில் பிரிக்ஸ் கூட்டமைப்பில் இணைந்த அர்ஜென்டினா, எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய அனைத்து நாடுகளும் சீனாவுடன் நல்ல உறவைக் கொண்டுள்ளனன.



பிரிக்ஸ், எஸ்சிஓ மற்றும் குவாட், ஜி7 (அழைக்கப்பட்ட உறுப்பினராக) மற்றும் ஜி20 போன்ற மேற்கத்திய ஆதிக்கக் கூட்டமைப்புகளின் ஓர் அங்கமாக இருக்கும் சில நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

இந்தச் சூழலில், இந்தியா ஒரு முக்கியமான உலகளாவிய சக்தி என்ற அந்தஸ்தையும், அதன் விளைவாக உலகின் முக்கியத் தலைவராக நரேந்திர மோதியின் இமேஜையும் உயர்த்தும் வகையில் இந்திய அரசின் செயல்பாடுகள் உள்ளன. இதனால் ஜி20 மாநாட்டை வெற்றிகரமாக நிறைவு செய்யும் பொறுப்பு இந்திய அரசுக்கு உள்ளது.

பல்வேறு கூட்டமைப்புகளின் போட்டியிடும் தன்மையைப் புரிந்துகொள்வது மட்டுமல்லாமல், அதைச் சமநிலைப்படுத்தும் இந்தியாவின் திறனை இது காண்பிக்கும். மேலும், அடுத்த ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் பிரதமரின் பெருமையை மேலும் அதிகரிக்கவும் இது உதவும். ●

# ஏன் மீண்டும் 13ஆவது திருத்தச்சட்டம் பேசுபொருளானது?



யதீந்திரா

13வது திருத்தச்சட்டம் தொடர்பில் பேசுவது தொடர்பில் பலவாறான அபிப்பிராயங்கள் கூறப்படுகின்றது. இன்றைய அரசியல் நிலைமைகளை புரிந்து கொண்டவர்கள் இதனை சரியென்று கூறுகின்றனர். தொடர்ந்தும் இப்படியே சென்றால் நிலைமைகள் மோசமடைந்துவிடும் - எனவே ஏதாவதொரு புள்ளியில் நாம் சந்திக்க வேண்டும். ஆனால், நிலைமைகளை புரிந்து கொள்ள மறுப்பவர்களோ அல்லது, புரிந்து கொள்ள விரும்பாதவர்களோ வேறு விதமாக பேசுகின்றனர். 13ஐ ஆதரிப்பவர்கள் இந்தியாவின் நிகழ்சிநிரலை முன்னெடுக்க விரும்புகின்றனர் - இது ஒரு சாராரின் கருத்து. இவர்கள் தமிழ் மக்களின் சமஸ்டிக் கோரிக்கையை திட்டமிட்டு பலவீனப்படுத்துகின்றனர் - இது இன்னொரு சாராரின் கருத்து. 13வது திருத்தம் என்றவுடன், இந்தியாவை தொடர்புபடுத்தி சிந்திக்கும் போக்கொன்றே மேலோங்கியிருக்கின்றது. இவ்வாறான அப்பிராயத்தை பரப்புவதையே சிலர் தங்களின் பணியாகவும் கொண்டிருக்கின்றனர்.

ஏன் 13வது திருத்தச்சட்டம் மீளவும் பேசுபொருளானது? 13வது திருத்தச்சட்டம் என்றவுடன் முட்டி மோதுவதற்கு காத்திருக்கும் எவரிடமும் இந்தக் கேள்விக்கு பதிலில்லை. ஆகக் குறைந்தது, இந்தக் கேள்வியின் அடிப்படையில், சிந்திப்பதற்குக் கூட, அவர்கள் தங்களை தயார்படுத்துவதில்லை. 13வது திருத்தச்சட்டத்தை ஒரு ஆரம்பப் புள்ளியாக ஏற்றுக்கொள்வதை முட்டாள்தனமென்று வாதிட முற்படுவர்களோ - தாங்கள் எவ்வாறானதொரு முட்டாள்தனத்துக்குள் சிக்குப்பட்டிருக்கின்றனர் என்பதை புரிந்துகொள்வதில்லை.

யுத்தம் முடிவுற்று 14 வருடங்களாகின்றன. இந்த காலத்தில் நடைபெற்றவைகள் ஏராளம். ஆனால் அதன் பின்னரும் 13வது திருத்தச்சட்டம் தொடர்பில் பேசப்படுகின்றதென்றால், அதன் பொருள் என்ன? இந்தக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டதாக சொல்லப்படும் தமிழர் அரசியல் செயற்பாடுகள் வெற்றியளிக்கவில்லை என்பது



தானே! கடந்த 14 வருடகால தமிழ் செயற்பாடுகள் தாக்கம் மிக்கதாக இருந்திருந்தால், 13வது திருத்தச்சட்டத்தை கையாள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காதல்லவா? இப்போது 13வது திருத்தச்சட்டம் பேசப்படுதவதற்கு உண்மையிலேயே யார் காரணம்? வெறுமனே சமஸ்டி பற்றி உளறிக் கொண்டு, தங்களின் குடும்ப அலுவல்களை பார்த்துக் கொண்டிருக்கும், தமிழ் தேசிய அரசியல்வாதிகள் (எல்லோரும் அல்ல) சிவில் சமூக பிரதிநிதிகள் என்போரா அல்லது, இருப்பதையாவது காப்பாற்றுவோம் என்று சிந்திப்பவர்களா? யார் இதற்கு காரணம்?

யுத்தம் முடிவுற்றதற்கு பின்னரான, கடந்த 14 வருடங்களில், 13வது திருத்தச்சட்டத்தை தாண்டிச் செல்வதற்கான அர்ப்பணிப்பை எவருமே காண்பிக்கவில்லை. உதாரணமாக, விடுதலைப் புலிகள் அரசியலை தீர்மானித்த காலத்தில், 13வது திருத்தச்சட்டம் தொடர்பில் மட்டுமல்ல - சமஸ்டி பற்றியோ, அல்லது, ஒரு நாடு இரண்டு தேசம் பற்றியும் பேசியதில்லை. ஏன்? - ஏனெனில், விடுதலைப் புலிகளின் வெற்றிவாதம் அனைத்தையும் செல்லாக் காசாக்கியது. ஏதோ பெரிதாக கிடைக்கப் போவதான ஒரு நிழல் அனைவரையும் ஆக்கிரமித்திருந்தது. அது உண்மையா அல்லது மாயையா என்பது பற்றிய சிந்திப்பதற்கும் எவருமே தயாராக இருக்கவில்லை. ஏனெனில், விடுதலைப் புலிகள் என்னும் பிரமாண்டத்திற்கு முன்னால் ஏனைய விடயங்கள் அனைத்தும் பெறுமதியற்றுப் போனது. அப்போதும் யதார்த்தமாக பேசியவர்கள் இருந்தனர் - ஆனால் அவர்களை பொருட்படுத்துவதற்கு எவரும் தயாராக இருக்கவில்லை. நான் உட்பட.



விடுதலைப் புலிகள் என்னும் பிரமாண்டம் மறைந்த போதுதான், அடுத்தது என்ன - என்னும் கேள்வி மேலெ ழுந்தது. இந்தக் கேள்விக்கான பதிலை தரக் கூடியவர்க ளாக சிலர் தமிழ் சமூகத்தின் முன்னால் காட்சியளித்தனர். முதலில் இரா. சம்பந்தன் என்னும் பார்வை மேலோங்கி யது. பின்னர் சம்பந்தன் பொருத்தமானவர் அல்ல - அதற்கு மாற்றானவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் - என்றும் சிலர் வாதிட்டனர். இப்போதும் அவ்வாறான குரல்கள் உண்டு. இற்கிடையில், அரசியலுக்கு புதிதாக வந்த சி.வி.விக்னேஸ்வரன் தொடர்பிலும் சிறிது காலம் அரசியல் காற்று வீசியது. அதுவும் அதிககாலம் நீடிக்கவில்லை. யுத்தத்திற்கு பின்னரான கடந்த 14 வருடகா லத்தை திரும்பிப் பார்த்தால், எவரிடமும் அர்பணிப்பு மிக்க அரசியல் செயற்பாடுகளை காண முடியவில்லை. இலங்கையின் ஆட்சியாளார்கள் மீது நிர்பந்தங்களை ஏற்படுத்த எவராலும் முடியவில்லை. சர்வதேசம் என்னும் சொல்லும் எதிர்பார்த்த நன்மையை தரவில்லை. அவர்களை தமிழர் பக்கமாக திருப்பும் வல்லமையையும் எவ ரும் ஜனநாயக தளத்தில் நிரூபிக்கவில்லை. இந்த அடிப் படையில் 14 வருட கால தமிழர் அரசியல் செற்பாடுகள் படுதோல்வியையே அடையாளப்படுத்தியிருக்கின்றது.

இந்த நிலையில் தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி சிந்திப்பவர்கள் என்னதான், செய்வதென்னும் கேள்வி மேலெழுந்தது. இதில் இன்னொரு விடயத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும். யுத்தம் முடிவுற்றதும் இந்தியா தொடர்பான கரிசனை எவரிடமும் இருந்திருக்கவில்லை. இந்தியா வழமைபோல் இலங்கை தொடர்பில் பேசுகின்ற போது, 13வது திருத்தச்சட்டத்தின் அடிப்படையிலான தீர்வை உச்சரித்துக் கொண்டிருந்தது. ஆனால் சம்பந்தன் தரப்போ, 13வது திருத்தச் சட்டம் தொடர்பில் உச்சரிக் கக் கூட இல்லை. மாறாக, மகிந்த ராஜபக்ச 13 பிளஸ் என்னும் ஒன்றை உச்சரித்துக் கொண்டிருந்தார். ஆனால் அதிலும் எவ்வித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை.

2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதை தொடர்ந்து, சம்பந்தனும் சுமந்திரனும் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசினர். அப்போதும் கூட நிலைமைகளை புரிந்து கொண்டவர்கள் 13வது திருத்தச்சட்டத்தை உச்சபட்சமாக பயன்படுத்துமாறு வலியுறுத்தினர். ஆனால் சம்பந்தனோ, 13வது திருத்தச்சட்டத்தை தாண்டி தாங்கள் அதிக தூரம் சென்றுவிட்டதாகவும், அது பற்றிப் பேச வேண்டியதில்லை - என்று கூறி, அனைவரதும் வாயை அடைத்தார். புதிய அரசியல் யாப்பு மூலம் பிரச்னைக்கான தீர்வை நெருங்கிவிட்டதாக கூறினார். இறுதியில் என்ன நடந்தது?

இந்தக் காலத்தில், சம்பந்தன் தரப்பின் தவறுகளை சுட்டிக்காட்டும் அரசியலை செய்ய வேண்டிய கஜேந்திரகுமார் பொன்னம்பலமோ - அதற்கு, முற்றிலும் எதிர்மாறான, யதார்த்த விரோத அரசியலையே முன்னெடுத்தார். வர முடியாத அரசியல் யாப்பு தொடர்பில் கொள்கை விளக்கமளிக்கும் வேலையில் தனது நேரத்தை செலிவிட்டார். இதன் மூலம் சம்பந்தன் சுமந்திரனை விடவும் தாங்களே, தமிழ்த் தேசிய புனிதர்கள் என்னும் அரசியல் மாயையொன்றை ஏற்படுத்துவது ஒன்றே, அவர்களின் ஒரேயொரு இலக்காக இருந்தது. மொத்தத்தில் இரண்டு தரப்புக்களுமே மக்கள் விரோத அரசியலையே முன்னெடுத்தன. உண்மையில் சமபந்தன் தரப்பை குற்றம்சாட்டுபவர்கள், சம்பந்தனின் யதார்த்த விரோத செயற்பாடுகளை முன்வைத்தே, தங்களின் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்க வேண்டும். ஆனால் அவர்களோ, சாதாரண மக்களின் நலன்களை முன்னிறுத்தியும் சிந்திக்கவுமில்லை, அதே வேளை தாங்கள் கூறியவற்றுக்கான உச்சபட்சமான அர்ப்பணிப்பையும் நிரூபிக்கவில்லை. வெறும் தேர்தல் மைய அரசியலை, முன்னெடுப்பதற்கான போட்டியிலேயே கவனம் செலுத்தினர்.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தொடர்ந்தும் சமஸ்டியென்றும், சர்வதேச விசாரணையென்றும் தமிழ் மக்களை இன்னும் எவ்வளவு காலத்திற்குத்தான் ஏமாற்றிக் கொண்டிருப்பது? இப்படியொரு கேள்வி சற்று வெளியில் முகம் காட்ட ஆரம்பித்தது. யதார்த்தமாக சிந்திக்க வேண்டியதன் அவசியம் தொடர்பில் பலரும் சிந்திக்கத் தலைப்பட்டனர். இந்த பின்புலத்தில்தான், மீண்டும் இந்தியாவை நோக்கி செல்ல வேண்டுமென்னும் கரிசனை முன்னாள் ஆயுத இயக்கங்களின் மத்தியில் பேசுபொருளானது. இந்த பின்புலத்தில்தான், டெலோ 13வது திருத்தச்சட்டத்தை ஆரப்பப் புள்ளியாக ஏற்றுக் கொள்ளும் விவாதத்திற்கு பிள்ளையார் சுழியிட்டது. பின்னர் ஏனைய கட்சிகளும் இந்த முயற்சியில் சங்கமித்தது. இந்த சந்தர்ப்பத்திலும் கூட, இரா.சம்பந்தன் முழுமையான ஒத்துழைப்பை வழங்கவில்லை. மீண்டும் வேதாளம் என்பது போல், இந்திய பிரதமருக்கான கடிதத்தில், தமிழ் கட்சிகள் மூன்றாக பிரிந்தன.

இதில் ஒரு அணியினரது, 13வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் நிலைப்பாட்டை மலினப்படுத்தும் நோக்கிலேயே, ஏனைய தரப்புக்கள் கடிதங்களை அனுப்பியிருந்தன. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணியின் சமஸ்டிக் கதைகள், தங்களின் தேர்தல் அரசியலை பலவீனப்படுத்தி விடுமோ என்னும் அடிப்படையில்தான், தமிரசு கட்சி சிந்திக்கின்றது. ஆனால் இது அடிப்படையிலேயே தவறானது. மக்களுக்கு எது நன்மையோ, அது பற்றி மட்டும்தான், மக்கள் தொடர்பில் சிந்திப்பவர்கள் கருத்தில்கொள்ள வேண்டும். மக்களை வாழ வைக்கும் முயற்சியில் தமிழ் தேசிய தரப்புக்கள் என்போரால் இது வரையில் ஆக்கபூர்வமாக எதனையும் நிரூபிக்க முடியவில்லை.

இதற்கு அடிப்படையான காரணம், எதனை எக்காலத்தில் கையிலெடுக்க வேண்டுமோ, அதனை கையிலெடுக்க தமிழ் கட்சிகள் தவறுகின்றன. 2015 ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து அனைத்து தரப்புகளும் ஓரணியாக 13வது திருத்தச்சட்டத்தை கையிலெடுத்திருந்தால், நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கும். அரசாங்கமும் வேறு வழியின்றி சில விடயங்களை செய்ய வேண்டிய நிர்பந்தத்திற்குள் தள்ளப்பட்டிருக்கும். ஆனால் அந்த வாய்ப்பை தவறவிட்டதால், இன்று நிலைமை மேலும் சிக்கலடைந்திருக்கின்றது. 13வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்திற்கே கடுமையான நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன.

13வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் பேசுபவர்களை முட்டாள்களென்று கூறுபவர்களோ, மறுபுறம், சமஸ்டியை அடையும் வழியைச் சொல்லத் தெரியாத முட்டாள்களாக இருக்கின்றனர். தாங்கள் முட்டாள்களாக இருப்பதை மறைப்பதற்காகவே, அவர்களுக்கு சதிக் கோட்பாடுகள் தேவைப்படுகின்றன. 13வது

(16ம் பக்கம் பார்க்க)

# அம்பாறை மைதானத்தில் ரென்னிஸ் திடல் திறப்பு!




அம்பாறை, செப். 11

அம்பாறை நகர சபை மைதானத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ரென்னிஸ் திடல் நேற்று உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் திலக் ராஜபக்ச, அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எச். ஏ. என். கே. தமயந்த விஜய சிறி, இலங்கை ரென்னிஸ் சங்கத்தின் தவிசாளர் இக்பால் பின் இஸ்ஹாக், இலங்கை இராணுவத்தின் 24வது காலாட்படை பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறி, உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

(ஐ)

# வீட்டில் கசிப்பு வைத்திருந்த ஆணும், பெண்ணும் கைது!

மட்டக்களப்பு, செப். 11

கசிப்பு வைத்திருந்த ஆணும் பெண்ணுமாக இருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று காத்தான்குடி போலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு - கிரான் குளம் பகுதியில் வீட்டில் கசிப்பை மறைத்து வைத்திருந்த நிலையில் பொலிஸார் அதனைக் கைப்பற்றினர்.

கைதான பெண்ணிடமிருந்து 24 லீற்றர் கசிப்பும் ஆணிடமி ருந்து 23 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதான இருவரும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவ டிக்கை எடுத்துள்ளனர்.

(ஐ)

# ஏன் மீண்டும் 13ஆவது...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தச்சட்டத்தை பற்றி எவரேனும் பேசினால் அவர்கள் இந்தியாவின் சம்பளப் பட்டியலில் இருப்பதான கதைகளை மக்கள் மத்தியில் பரப்ப முற்படுகின்றனர்.

13வது திருத்தச்சட்டம் தொடர்பில் சாதகமாக நோக்க வேண்டுமென்று கூறும், தமிழ் தேசிய அரசியல்வாதிகளுக்கு, இந்தியா நிதி வழங்குவதான கதைகளை கூறி, அவர்களின் ஈடுபாட்டை சீர்குலைக்க முற்படுகின்றனர். உண்மையில் இவ்வாறானவர்கள் யார், இவர்களது மக்கள் விரோத பின்னணி என்ன? இதற்கு பின்னால் சீனாவின் திரைமறைவு நகர்வுகள் இருக்கின்றதா? ஏன் அவ்வாறு நாம் சந்தேகிக்கக் கூடாது?

13வது திருத்தச்சட்டத்திற்கு ஆதரவாக இந்தியா நிதி வழங்குவது உண்மையானால், 13வது திருத்தத்தை எதிர்ப்பவர்களுக்கு ஏன் சீனா நிதியளிக்க முடியாது? இதன் மூலம் இந்திய எதிர்ப்பு மனோபாவத்தை, வடக்கு கிழக்கு, தமிழ் மக்கள் மத்தியில் கூர்மைப்படுத்துவதற்கு சீனா முயற்சிக்கலாம்தானே! இதற்கு சில சீன முகவர்கள் துணை போகலாமல்லவா! இந்திய எதிர்ப்பு கருத்துக்களை, வடக்கு கிழக்கில் பரப்புவதை ஊக்குவிப்பதற்கான முகவர்கள் கிடைத்தால், சீனா நிச்சயம் அவர்களை பயன்படுத்திக்கொள்ளும். நான் தர்க்கரீதியில்தான், இந்தக் கேள்விகளை முன்வைக்கின்றேன் - அதாவது, 13வது ஆதரவுக்கு பின்னால் இந்தியா இருப்பது உண்மையாயின், 13 எதிர்ப்புக்கு பின்னால் சீனா இருப்பதற்கான காரணத்தை எவ்வாறு நாம் நிராகரிக்க முடியும்?

13எதிர்ப்பை முன்வைப்பவர்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம். ஒன்று, ஏழை தமிழ் மக்களின் நலன்கள் தொடர்பில் துளியளவும் அக்கறையில்லாதவர்கள். இரண்டு, இந்தியா தொடர்பான சதிக் கோட்பாடுகளை பரப்புவர்கள். மூன்று, சிங்கள தேசியவாத தரப்புக்களின் 13 எதிர்ப்பிற்கு துணைபோபவர்கள். நான்கு, அரசியல் தீர்விற்கான முயற்சிகளுக்கு, தமிழ் மக்கள் பக்கத்தில் ஆதரவில்லையென்னும், அரசாங்கத்தின் கருத்துக்கு வலுச் சேர்ப்பவர்கள். இப்போது ரணில் இவ்வாறானதொரு வாதத்தைத்தான் முன்வைக்கின்றார்.

இவர்களின் இலக்கு வெற்றிபெற்றால் நடக்கப் போவது ஒன்று மட்டுமே. அதாவது, வசதியுள்ள மத்திய தரவர்க்கம் நாட்டைவிட்டு வெளியேறிவிடும். வசதியில் லாத மக்களே மிஞ்சுவர். அவர்கள் அரசாங்கத்தின் பக் கமே இறுதியில் சாய்வர். ஏனெனில் - சோறே, அவர்க ளது பிரதான பிரச்சினையாக இருக்கும். ஆகக் குறைந் தது, 13வது திருத்தச்சட்டத்திலுள்ள சில விடயங்கள் அமுல்படுத்தப்பட்டால், ஓரளவு முன்னேறுவதற்கான அடித்தளம் உருவாகும். முற்றிலும் சாதகமாக அமையுமென்றோ, 13 ஒரு சர்வலோக நிவாரணியென்றோ நாங்கள் வாதிடவில்லை. இருப்பதை உச்சபட்சமாக பயன்படுத்திக் கொண்டு இல்லாதவற்றுக்காக முற்சிப்பது பற்றியே நாம் வாதிடுகின்றோம். அது ஒன்றுதான் இன்றைய சூழலில் தக்கன பிழைப்பதற்கான ஒரே வழியாகும். தக்கன பிழைத்தல் என்பது, ஆற்றலோ அல்லது அறிவோ அல்ல - மாறாக, சூழ்நிலையை புரிந்து கொண்டு, அந்தச் சூழ்நிலைக்குள் தப்பிப்பிழைப்பதற்கான ஆற்றல் பற்றியது. அதற்கான உக்திகள் பறறியது. இன்றைய சூழலில் தக்கன பிழைத்தல் என்பது, இருப்பதை பாதுகாத்துக் கொண்டு, முன்னேறுவதற்காக காத்திருப்பதாகும்.

எனவே - அடிப்படையில் இன்றைய சூழலில், எவரெல்லாம், இருப்பதை பாதுகாத்துக் கொண்டு, முன்னேறலாம் - என்று, கூறுபவர்களை தோற்கடிக்க முயற்சிக்கின்றார்களோ, அவர்களைப் பற்றி, அவதூறுகளை பரப்புகின்றார்களோ, அவர்கள் அனைவருமே தமிழ் இன அடையாளத்தை, சிதைத்து, உருத்தெரியாமல் ஆக்கும் நீண்டகால இலக்கின் முகவர்களாவர். ●




